பங்குனி
MARCH 1985

# கமநலம்



## மகாபொல சிறப்பிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்கறி

# விதைகள்

## ஐக்கிய இராச்சியத்தின் ஹேர்ஸ்ட் நிறுவனத்தின் உயர்தர விதைகள்

சுயதேவைப் பூர்த்தி இலங்கையை உருவாக்க தன்னை அர்ப்பணம் செய்துள்ள சிபெற்கோ தரமதி கரிக்கப்பட்ட உயர்தர விதைகளை விற்பனை செய்வதற்கு கையிருப்பாளர்கள் / வியாபாரிகள் என்போரிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

இவ்விதைகளின் சந்தைப்படுத்தல் நடைபெறுவது பரந்த அளவிலான சந்தைப்படுத்தற் சேவையைச் செய்யும் சிபெற்கோவின் விவசாயப்பகுதியினுலாகும்.

உத்தேச கையிருப்பாளர்கள் / வியாபாரிகள் தமக்கு தேவைப் படுகின்ற அளவு, வகை என்பவற்றை குறிப்பிடுமாறு வேண்டப்படுகின்றனர்.

விவசாய இரசாயன முகாமையாளர்,
சிபெற்கோ
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
கொலன்னாவ, வெல்லம்பிட்டி.

---

**உற்பத்தி**

பீட்ரூட் (டிட்ரயட் ரெட்)
100 கி X டின்கள்
200 கி X டின்கள்
கெரட் (ஏலி நெண்ட்ஸ்)
200 கி X டின்கள்
கெரட் (செண்டினரிரெட்)
200 கி X டின்கள்
காளப்ளவர் (ஸ்னேபோலி)
50 கி X பொதிகள்
100 கி X டின்கள்
கெப்ஸிகும் (ஹங்கேரியன் யெலோ வெக்ஸ்)
50 கி X பொதிகள்
வெங்காயம் (ரெட் க்ரெயோல்)
100 கி X டின்கள்
200 கி X டின்கள்
நோகோல் (ஏலிவைட்வியன்ன)
100 கி X டின்கள்
50 கி X பொதிகள்
லீக் (மியூஸ்ஸல் பொரோ)
200 கி X டின்கள்
100 கி X டின்கள்

லெடியூஸ் (எவன் கிரிஸ்ப்)
25 கி X பொதிகள்
டேனிப் (பி. ரி. டப். ஜி)
200 கி X டின்கள்
சிலேரி (வைட் ஐஸ்)
25 கி X பொதிகள்
ராபு செரி பெலி)
50 கி X பொதிகள்
ராபு (பிரென்ச் பிரேக் பாஸ்ட்)
50 கி X பொதிகள்
ராபு (ஸ்கார்லெட் குலோப்,
50 கி X பொதிகள்
பார்ஸ்லேமொஸ் கிறீன்வெல்வட்)
50 கி X பொதிகள்
கோவா (பிருயுன்ஸ் வீக்)
100 கி X டின்கள்
50 கி X பொதிகள்
சிவப்பு கோவா
100 கி X டின்கள்
50 கி X பொதிகள்
அவரை (ரொடேல்போ)
50கி X பொதிகள்

பெயர்: ____________________

முகவரி: ____________________

(வியாபார) ____________________

---

**சிபெற்கோ** **ஹேர்ஸ்ட் Hurst**

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
சிபெற்கோ
கொலன்னாவ, வெல்லம்பிட்டி.

By Appointment to Her Majesty The Queen Seedsmen

Creative Services

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 1004

# கமநலம்

மலர் : 12 ★ பங்குனி 1985 ★ இதழ் : 1

*பிரதம ஆசிரியர் :*

திரு. ரி. பி. சுபசிங்க
(பணிப்பாளர்)

*ஆசிரியர்கள் ;*

க. தில்லைநாதன்
சோ. ராமேஸ்வரன்

*ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் :*

திரு. எச். ஏ. சிறிவர்தன
திரு. கபில பண்டார
திரு. ஆர். பி. யூ. பத்திரன
திரு. டபிள்யு. ஜி சோமரத்ன
திரு. எல். டி. ரி. விஜேதுங்க
திரு. பி. டி. ஆர். குமாரசிறி
திரு. கே. ஏ. எஸ். தயானநத
திரு. ஆர். எம். குணரத்ன
திரு. ஏ. எஸ். விதான பத்திரன
திரு. ஜயந்த கோட்டகே
திரு. காமினி விக்ரமசிங்க
திருமதி. எஸ். ஆர். பண்டார

பக்கம் **பொருளடக்கம்**

2. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கட்டம்
3. மகாபொல புலமைப்பரிசிலின் பின்னணி
7. மகாபொலவின் சிற்பி அதன் பாதையை விளக்குகிறார்
12. மகாபொலவின் வேண்டுகோள்
15. வாழ்க்கையின் கனவில் மலர்ந்த புதுமலர்
17. பார்வை இழந்த போதிலும் ...
18. பாவனையாளரைப் பாதுகாக்கும் மகாபொல திட்டம்
23. பாவனையாளர்களுக்கு கை கொடுத்தல்
27. கறுவா உற்பத்தியும், ஏற்றுமதியும் உயர சில வழிகள்


கமக்காரர்களின் மத்தியில் தன்னம்பிக்கையையும் மன உறுதியையும் ஏற்படுத்தி, அவர்கள் கிராமிய நிறுவனங்களின் நடவடிக்கைகைகளில் பூரண பங்கெடுத்து அவற்றுடன் ஏற்கனவே உள்ள தொடர்பினை மேலும் வலுப்படுத்தி நிரந்தரமானதொன்றாக்கிக் கொள்ள இச்சஞ்சிகை உதவும்.

*புகைப்படங்கள்:*

ரஞ்ஜித் திசாநாயக்க

விலை: (தனிப்பிரதி) ரூ 3.00
ஆண்டு சந்தா ரூ. 10.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த

## ஒரு கட்டம்

சமுதாயத்தில் எப்போதுமே ஒன்றேடொன்று சேராத இரண்டு துறைகளே இணைக்கும் நிறைவாண்டினை குறிக்கு முகமாக இன்று இக் 'கமநலம்' சஞ்சிகை ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வியும், வர்த்தகமும் நாம் மேற்கூறிய இரண்டு துறைகளாகும். அன்னைக்கால சரித்திரங்களில் இருந்து நாம் அறியக்கூடியது இவ்விரண்டு துறைகளும் ஒன்றுடன் சேராததே. உதாரணமாக வர்த்தகம் தன்னலத்திற்காக செய்யப்படும் ஒரு துறையாகும். ஆனுல், கல்வி பொது நலத்திற்காக நடைபெறும் ஒரு துறையாகும்.

இவ்விரண்டு துறைகளேயும் ஒன்று சேர்க்கும் 'மகாபொல' திட்டம், திறந்த போட்டி வர்த்தகத்தின் இலட்சியத்தின் அடிப்படையில் பெறப்படும் இலாபத்தை தீவின் நாலா பக்கங்களிலுமுள்ள மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதுடன், அவர்களுடைய மக்களின் கல்விக்கு நிதியைப் பெற்றுக்கொடுக்கும் விலேமதிக்க முடியாத ஓர் உன்னத திட்டமாகும். இவ் வருமையான திட்டத்தைப் பற்றி சில தகவல்களேத் தருவதே இந்த இதழின் நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாபொல புலமைப் பரிசிலின் பின்னணி

பாலர் வகுப்பு முதல் பல்கலைச்ழகம் வரையிலான இலவசக் கல்வியை பல முன்னேற்றமடைந்த நாடுகளில் இடம் பெறுவது போன்று எமது நாட்டிலும் வழங்குவது மகிழ்ச்சிக்குரிய விடயம் என்றே கருதவேண்டும். எனினும், அதன் மூலம் நாம் உரிய பலனைப் பெற்றுள்ளோமா என்பது முக்கியமான கேள்வியாகும். எப்படி இருந்த போதிலும் சாதாரண மக்களின் பிள்ளைகள் பொருளாதார நெருக்கடிகளின் காரணத்தினால் பல்கலைக்கழக வரப்பிரசாதத்தை பெற முடியாதிருந்து வந்தது.


சில சமயங்களில் பல்கலைக்கழக பாதைக்குள் தமது பிள்ளைகளை அனுமதிப்பதற்கு சில பெற்றோர் காணி, பூமிகளையும், சொத்துக்களையும் விற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை கூட ஏற்பட்டுள்ளது. எனவே, அத்தகைய ஏழ்மையில் வாடும் மாணவர்களுக்கு அந்தக் கல்விச் செல்வத்தை பெற்றுக் கொடுப்பது அவசியமாகும். அதனால் அதற்கான அடிப்படைத் திட்டத்தை உருவாக்குவது அவர்களுக்கு கிட்டும் தேவாசீர்வாதம் என்றே சொல்ல வேண்டும்.

இதற்கு முதலில் வித்திட்டது மக்கள் வங்கியாகும். 1965 ஆம் ஆண்டளவிலேயே முதன் முதலில் மக்கள் வங்கியின் மூலம் பல்கலைக்கழக மாணவர்களுக்குக் கடனுதவி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

சாதாரணமாக வாடிக்கையாளர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமையவே இக்கடன் கொடுப்பனவுகள் இருந்த போதிலும், நூற்றுக்கு ஐந்து சதவீதம் சகாயமான முறையில் வட்டி அறவிடப்பட்டது. எனினும், அவ்விதயாவது கடனை பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்குவதென்றாலும் கூட அதற்காக இரண்டு பேர் பிணை நிற்க வேண்டியிருந்தது.

அதன் பின்பு 1972 இல் 04 ஆம் இலக்க மாணவர் (உயர்கல்வி) கடனுதவி சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. அதன் பிரகாரமே பின்பு பல்கலைக்கழக மாணவர்களுக்கும், இது போன்றே உயர்கல்வியை நாடும் இதர மாணவர்களுக்கும் வர்த்தக வங்கி மூலம் கடனுதவி வழங்கப்பட்டது.

மேற்படி சட்டமூலத்தின் பின்பு வங்கி மூலம் கடன் பெறும் பொழுது வங்கியால்



மகாபொல விழாவில் கலந்து கொண்ட விருந்தினர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக் கொள்ளக்கூடிய பிணையாளராக இருவர் முன்வரவேண்டும் என்பதற்குப் பதிலாக மாணவரின் தாய் அல்லது தந்தை அல்லது பாதுகாவலர் பிணையாளராகத் தோற்றுவதற்கு வழி சமைக்கப்பட்டது. அதனால் குறைந்த வருமானம் பெறுகின்ற எவருமே மாணவர் கடனுதவியை பெறுவதற்கு வழியேற்பட்டது. மாணவர் (உயர்கல்வி) கடன் உதவிச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்பு மற்றுமொரு நலன் விரும்பி அந்தத் திட்டத்துடன் இணைந்து கொண்டது. அதுவே 'இலங்கை வங்கி'!

சட்டமூலத்தின் பின்னர், அரசின் அவதானிப்போடு முதல் முறையாக 1973 ஆம் ஆண்டிலேயே இலங்கை வங்கி மூலம் கடன் வழங்கப்பட்டது. அன்றுமுதல் மக்கள்வங்கியும், இலங்கை வங்கியும் வருடந்தோறும் மாறி மாறி கடன் வழங்கி வருகின்றன. அதாவது, ஒரு வருடம் அனுமதி பெறுபவர்களுக்கு மக்கள் வங்கியும். மறு வருடம் அனுமதி பெறுபவர்களுக்கு இலங்கை வங்கியுமாகக் கடனுதவி வழங்கி வருகின்றன.

1964 ஆம் ஆண்டில் முதல் தடவையாக ஒரு மாணவருக்கு மக்கள் வங்கியின் மூலம் வருடத்திற்கு 750 ரூபாவே கடனாகக் கிடைத்தது. பின்பு வாழ்க்கைச் செலவினங்கள் உயர்ந்ததைத் தொடர்ந்து இன்று வருடத்திற்கு 2250 ரூபா (மாணவர் கடன் வருடத்திற்கு 10 மாதங்களுக்கு வழங்கப்படும்) 10½ சதவீத வட்டியில் மூன்று தவணைகளில் வழங்கப்படுகிறது. மாணவரின் வசிப்பிடத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்குள்ள தூரம், அவரது குடும்ப வருமானம், குடும்ப அங்கத்தவரின் எண்ணிக்கை என்பவற்றைக் கருத்திற் கொண்டே கடன் தொகை பற்றியும் தீர்மானிக்கப்பட்டது.



மகாபொல விழாவொன்றில்
ஜனாதிபதியும், அமைச்சர் லலித்தும்

மாணவருக்கு நிவாரணம் வழங்கப்படுவது கடன் பெற்றுக் கொடுப்பதோடு மட்டும் நின்று விடுவதில்லை. பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தும் போதும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறி தொழில் ஒன்றைப் பெற்றுக் கொண்டவுடன், அது பற்றிய விபரத்தை கடன் பெற்ற வங்கிக்கு மாணவர் அறிவிக்கவேண்டும். அதன் பின்பு சொற்பமான பணம் அவரது சம்பளத்திலிருந்து மாதாந்தம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வேலைக்கு சேர்ந்து நான்கு மாதங்கள் கடந்த பின்பே அக்கடன் அறவிடப்படும். அப்பொழுது எடுத்த கடனை வட்டியுடன் செலுத்த வேண்டும்.

இரண்டு வங்கிகளும் தொடர்ந்து இவ்விதம் கடனுதவி வழங்க முடியாத நிலையிலிருப்பதாக அறிவித்துள்ளன. இலங்கைவங்கி இது வரையில் (1983 டிசம்பர் மாதம் வரையில்) வழங்கிய கடன் தொகை :- 109,441, 523.10 இலட்சம் ரூபா ஆகும். அறவிட்ட தொகை 14,958, 837.24 இலட்சம் ரூபா, மக்கள் வங்கி சுமார் 910 இலட்சம்ரூபாவரையில் கடன் வழங்கியுள்ளது. ஆனால், அறவிடப்பட்டிருப்பதோ சுமார் 139 இலட்சம் ரூபாதான். இதிலிருந்து வழங்கிய கடனில் 14-15 சதவீதம் மட்டும்தான் இது வரையில் மீண்டும் பெறப்பட்டுள்ளமை புலனாகிறது.

இவ்விதம் வழங்கப்பட்ட கடனை அவர்கள் மீளச் செலுத்தாதிருப்பதற்கு பல காரணங்கள் உண்டென வங்கிகள் தெரிவிக்கின்றன. அவர்கள் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறியவுடன் வங்கிகளுடன் உள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டு விடுவது, தொழில் கிடைத்த பின்பு வங்கிக்கு அறிவிக்காதிருப்பது, குறைந்த வட்டி என்பதனால் அதனைத் திருப்பிச் செலுத்துவதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரத்தையின்றி இருப்பது, தனியார் துறைகளிலும், சுய தொழில்களிலும் அவர்கள் ஈடுபட்டு வேலை செய்வதால் அவர்களைப் பற்றிய விபரங்களை வங்கி அறிய முடியாதிருப்பது, வேலை கிடைத்த போதிலும் பொருளாதார நெருக்கடிகளுக்கு ஆளாதல், வெளிநாடுகளுக்குச் சென்றுவிடுதல் போன்றவையே அக் காரணங்களாகும்.

மாணவர்களின் பிரச்சினை இவ்விதப் உக்கிரம் அடைந்துள்ள வேளையிலேயே பல்கலைக்கழகத்தோடு தொடர்பில்லாத மற்றுமொரு முக்கிய இயக்கம் நாட்டில் உருவானது. அதாவது பாவனையாளருக்கு கல்வியை வழங்குவதுதான் அந்த இயக்கத்தின் நோக்கம். அந்த இயக்கத்தை தோற்றுவித்தவர் தற்போதைய தேசிய பாதுகாப்பு அமைச்சரும், முன்னாள் வர்த்தக, கப்பல் போக்குவரத்து அமைச்சருமான திரு. லலித் அத்துலத்முதலியாவார். அந்த இயக்கத்தின் பெயர் 'மகா பொல'! அப்படி ஒரு உன்னத இயக்கம் தோன்றுவதற்கு தற்போதைய அரசு பதவிக்கு வந்ததும் ஒரு காரணம் தான். அதாவது மட்டுப்படுத்தப்பட்டிருந்த பொருளாதாரக் கொள்கை நீக்கப்பட்டு நாட்டினுள் திறந்த பொருளாதாரக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் மூலம் புதிய உற்பத்திப் பண்டங்கள் வெளிநாடுகளின் தயாரிப்புக்கள் என்பனவற்றை எமது பாவனையாளர்கள் அறிவதற்கும்,அனுபவிப்பதற்கும் வாய்ப்புகள் கிடைத்தன.

அதே சமயம், கொள்ளை லாபம் பெற முயற்சிக்கும் வர்த்தகர்களிடமிருந்து பாவனையாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின் பிரகாரம் வர்த்தகச் சந்தையில் மக்களின் நிர்வாகத்தைப் பிரயோகிப்பதற்கும் வழி சமைக்கப்பட்டது. எனினும், அதனுல் அதிகம் நன்மை பெற்றவர்கள் நகரப்புற வாசிகள் தான் என்பது கவனிக்கத் தகுந்தது. எனவே, குறித்த நன்மையை அனைத்து மக்களும் பெறத்தக்க விதத்தில் அச்சட்டத்தை அமுல்படுத்தவேண்டிய அவசியமேற்பட்டது. அந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நகரப்புற தனிப்பட்ட வர்த்தக நிலையங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகள் கிராமப்புறங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டன.



மகாபொல புலமைப் பரிசில் பெற வந்த மாணவரில் ஒரு பகுதி

மகாபொல நிகழ்ச்சிகள் கிராமம் கிராமமாக பாடசாலைகளில் நடத்தப்பட்டன. அது நடைபெறும் பகுதிகளில் பிரவேசக் கட்டணமாக 2 ரூபா அறவிடப்பட்டது. அவ்விதம் திரட்டப்பட்ட பணம், நிகழ்ச்சிகள் நடத்தப்பட்ட அந்தந்தப் பாடசாலைகளின் அபிவிருத்திகளுக்காக பயன்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் தீர்மானித்தார்.

இச் சந்தர்ப்பத்தில் அமைச்சரிடம் தோன்றிய மற்றுமொரு எண்ணம் தான், உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்கும் கை கொடுக்க வேண்டுமென்பது ஆகும். மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார கஷ்டங்களுக்கு மத்தியில் இலவசக் கல்விக் கொள்கையை அர்த்தமுள்ளதாக்குவதாயின், குறிப்பிட்ட மகாபொல நிகழ்ச்சிகளின் மூலம் திரட்டப்படும் நிதியிலிருந்து ஏழை மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்க வேண்டும் என்ற தீர்மானமும் அமைச்சருக்கு உதயமானது. அத் தீர்மானமே இறுதியில் மகாபொல புலமைப் பரிசிலாகத் தோற்றம் பெற்றது. இந்த உன்னத நோக்கத்தினை புரிந்து கொண்ட செல்வந்தர்களினலும் அதற்கான நிதியத்திற்கு நாளுக்கு நாள் பணம் சேர்ந்தது. அதன் பிறகு மகாபொல சீட்டிழுப்பு மூலம் திரட்டப்பட்ட நிதியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சேர்ந்து இப்பொழுது இந்நிதியத்திற்கு 10 கோடி ரூபாயளவில் சேமிக்கப்பட்டுள்ளது.

மகாபொல புலமைப்பரிசில் நேரடியாக குறித்த நிதியிலிருந்து வழங்கப்படுவதில்லை. 45 ஆயிரம் ரூபாயளவில் மேற்படி புலமைப் பரிசில் ஒவ்வொன்றுக்கும் ஒதுக்கப்பட்டது. அந்தப்பணம் வங்கியில் வைப்பிலிடும் பட்சத்தில் அதிலிருந்து பெறப்படும் விசேட வட்டியின் மூலம் புலமைப்பரிசில் உதவி வழங்கப்படும்.

பொருளாதார ரீதியாக நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள மாணவர்கள் மட்டுமல்லாது கூடியவரையில் தமது குடும்ப நிலவரங்களின் தன்மைகளை எடுத்துக் கூறும் மாணவ, மாணவியரும் இந்தப் புலமைப் பரிசிலை பெறத்தகுதி உடையவர்களாக இருப்பது அதற்குள்ள தனிச் சிறப்பு.

ஒவ்வொரு கல்வி வருடத்திலும் தமது குடும்பச் சுமைகளை தெரிவிக்கும் மாணவர்களுக்கும் இவ்விதம் புலமைப்பரிசில் வழங்கப்படுகிறது. திறமையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்கும் இந்தப் புலமைப் பரிசில் 15 சதவீதம், உயர்கல்வி பெறும் காலம் முடிவடையும் வரையில் வழங்கப்படும். மாதம் ஒன்றிற்கு 400 ரூபா வீதம் வருடத்திற்கு 4 ஆயிரம் ரூபா வழங்கப்படும். திறமையை வெளிப்படுத்தும் ஏழை மாணவர்களுக்கு மாதாந்தம் 350 ரூபா வீதம் வழங்கப்படும்.

மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் முதல் தடவையாக 1981 நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெற்றது. அன்று 411 மாணவர்களுக்கு இந்தப் பரிசில் கிடைக்கும் பாக்கியம் கிட்டியது. அதில் 365பேருக்கு பணத்தின் தேவை இருந்ததுடன் 45 பேர் அதிகம் புள்ளிகளைப் பெற்றும் இருந்தனர். இதுவரையில் 3 வருடங்களில் பல மாணவ மாணவியர் இப்பரிசில்களைப்பெற்றுள்ளனர். அதாவது 81–82, 82-83, 83-84 ஆகிய கல்வி



ஜனாதிபதி புலமைப் பரிசில் வழங்குகிறார்

ஆண்டுகளில் வருடாந்தம் 411 மாணவ மாணவியர்களுக்கு அந்தப் பாக்கியம் கிட்டிய போதிலும், இந்தப் புலமைப் பரிசிலைத் தோற்றுவித்த சிற்பியான அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி அவர்களின் நோக்கமானது – பல்கலைக்கழகங்களுக்குப் பிரவேசிக்கும் அனைத்து மாணவர்களுக்குமே அது கிட்ட வேண்டும் என்பதுதான். 1982 ஆம் ஆண்டிற்கென 1001 புலமைப் பரிசிலும், 1983 ஆம் ஆண்டிற்கென 2500புலமைப்பரிசிலும் வழங்கப்பட்டன,

1984 ஆம் ஆண்டிற்கென 3000 புலமைப் பரிசில் வழங்குவதற்கென திட்டமிடப்பட்டது. அமைச்சர் திரு. அத்துலத் முதலி அவர்களுக்கு மற்றுமொரு எண்ணமும் உண்டு. அதாவது பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமன்றி உயர்கல்வி பெறும் ஏனைய துறை மாணவர்களுக்கும் அப்பாக்கியம் கிட்ட வேண்டும் என அவர் எதிர்பார்க்கிறார். அது மட்டுமல்ல ஜனாதிபதி நிதியுடன், மகாபொல நிதியமும் இணைந்து வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பயிலுவதற்கு வாய்ப்புக் கிட்டும் மாணவர்களுக்கும் மகாபொல புலமைப்பரிசில்களை எதிர்காலத்தில் வழங்க வேண்டும் என்ற எண்ணமும் அவருக்குண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாபொலவின் சிற்பி அதன் பாதையை விளக்குகிறார்

**இந்நாடு, உயர் கல்வித்துறையிலும், வர்த்தகச் சந்தைகளிலும் புதிய வெற்றிகளை ஈட்டியுள்ளது. எதிர்காலத்திலும் மேலும் பல வெற்றிகளைக் குவிக்கும் விதத்தில் மக்களின் நம்பிக்கைகளுக்கு பாத்திரமாகியுள்ள 'மகாபொல' திட்டத்தின் சிற்பியிடமிருந்து ''கொவி ஜனதா'', ''கமநலம்'' சஞ்சிகைகளை வெளியிடும் குழு சில கேள்விகளுக்கு விடை கண்டது. எமது நாடு எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளிலிருந்து தீர்வுகளைக் காணுமுகமாக அதற்கென தன்னை அர்ப்பணித்து சேவையாற்றும் தேசிய பாதுகாப்பு அமைச்சர் இக்குழுவின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியபோது தெரிவித்த கருத்துக்களை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.**

**கேள்வி:-**

தற்பொழுது எல்பிட்டியாவில் நடைபெறும் மகாபொல நூறாவது கண்காட்சி விழாவினை முன்னிட்டு அதன் சிற்பி என்ற முறையில் என்ன கருதுகிறீர்கள்?

பதில்:-

இந்த விழா மூன்று காரணங்களினால் முக்கியத்துவம் பெறுகின்றது. முதலாவது இந்த இயக்கம் ஆரம்பித்து ஐந்து வருடமாகின்றது; இரண்டாவது - நூறாவது கண்காட்சி விழா, மூன்றாவது - இந்த வருடத்திலும் இதனைக் கொண்டாட முடிந்தது. இந்நாட்டின் மாணவர்கள் பல்கலைக் கழகத்துள் பிரவேசிக்கும் பாக்கியத்தைவிட, மாபொல புலமைப் பரிசில் அவர்களுக்குக் கிடைப்பது முக்கியத்துவமானது. அத்துடன், முதல் விழா காலி மாவட்டத்தில் நடந்தது. அதே போன்று இந்த 100 ஆவது விழாவும் தென் பகுதியிலேயே நடைபெறுவதற்கு எமக்கு வாய்ப்புக் கிட்டியிருப்பது எமது வெற்றிப் படிகளுக்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

கேள்வி:-


அமைச்சர் அவர்களே, மகாபொல திட்டம் ஆரம்பித்து 5 வருடம் பூர்த்தியாகியுள்ள இவ்வேளையில் அத்தகையதொரு திட்டம் உங்கள் உள்ளத்தில் தோன்றுவதற்கு அடிப்படையாக இருந்த காரணம் என்ன?

பதில்:-

மகாபொல ஆரம்பிக்கப்பட்டதே புதிய பொருளாதாரக் கொள்கையை மக்களுக்கு விளங்கப்படுவதற்காகத்தான். 77, 78, 79 ஆம் ஆண்டுகளில் நாட்டைச் சுற்றி நாம் ஒரு கண்ணோட்டம் செலுத்துகையில் புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைப் படுத்தப்படும் விதம் பற்றி அறிய முடிந்தது. புதிய முறைகளின் மூலம் எவ்விதம் நன்மைகளைப் பெற முடியும் என்பதுபற்றி வர்த்தகத்துடன் தொடர்புடைய வர்த்தகர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் எதுவுமே தெரியாமல் இருந்தது. போட்டா போட்டி, பொருட்களின் விலைக் குறைப்பு பற்றிய விளக்கம் என்பன பற்றி பாவனையாளர்கள் அறிவது எங்ஙனம்? இது போன்ற பல்வேறுபட்ட கேள்விகளுக்குப் பாவனையாளர் மத்தியில் போதிய அறிவு இருக்கவில்லை என்பது எனக்குத் தெரிந்தது. அதுவும் மனித இயல்புகளில் ஒன்றுதான் என்றும் எனக்குப் புரிந்தது. 20, 25 வருட காலமாக இங்கு வேறு விதமான பொருளாதாரம்தான் இருந்தது. முதலில் கிராம மட்டத்தில் சென்று இது பற்றி மக்களுக்கு விளங்க வைக்க வேண்டும் என எண்ணினோம். அப்பொழுது எதிர்பாராத விதமாக கல்வித்துறை பற்றியும் சிந்திக்கலானோம். இது போன்ற விழாக்களை நாம் நடத்துகையில் எமக்குப் பாடசாலைகளே பெரிதும் உதவின. அவ்விதம் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிற்பியின் கரத்தால் புலமைப் பரிசில் பெறும் மாணவன்

களில் நாம் விழா நடத்தும்போது எமக்கும் பணம் சேர்ந்தது. அவ்விதம் சேகரிக்கப்பட்ட நிதியை ஏதேனும் வழியில் பயனுள்ள முறையில் பயன்படுத்த வேண்டியது அவசியம். அதனை வர்த்தக அமைச்சுக்கு கொண்டு செல்ல நான் விரும்பவில்லை. அதனால் குறிப்பிட்ட பாடசாலை ஒன்றில் நடத்தப்பட்ட மகாபொல விழாவில் சேரும் பணத்தை அப் பாடசாலைக்கும், அப்பாடசாலை அமைந்துள்ள தொகுதியின் அபிவிருத்தி வேலைகளுக்கும் ஒதுக்குவது எனத் தீர்மானித்தோம்.

கேள்வி:-

மகாபொலவின் மூலம் பல்கலைக் கழக மாணவர்களுக்கு பயன் அளிக்க வேண்டும் என்ற எண்ணம் எப்படி உங்களுக்குத் தோன்றியது?

பதில்:-

அதுவும் கல்வித்துறையோடு மகாபொல தொடர்பு கொண்டதன் பின்னர்தான். கல்வித்துறையும், வர்த்தகத்துறையும் ஒன்றாக செயற்படும்போது கிட்டும் பயன்பாட்டின் மூலம் இந்நாட்டில் இலவசக் கல்வியைப் பூரணத்துவமடையச் செய்ய முடியும் என நினைத்தோம். அத்துடன் ஜனாதிபதி அவர்களின் நீண்டகால யோசனையான இலவசப் பாடநூல் விநியோகத் திட்டத்தையும் இந்த அரசினால் செயல்படுத்த முடிந்தது. அப்பொழுது உயர்கல்வியானது தெரிவு செய்யப்பட்ட உயர்ந்த கொடை என்றே நான் கருதினேன். அந்த உயர் கல்வியை கற்க விரும்புபவர்கள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டிருப்பின் தமது விருப்பத்தை நிறைவேற்ற முடியாதவர்களாகி விடலாம். பொருளாதார நெருக்கடியானது கல்வித்துறையில் குறைந்த பட்ச வெற்றிகளைக் கூட ஈட்டித்தர மாட்டாது என்பதை நான் கண்டும், கேட்டும் அனுபவ பூர்வமாக அறிந்துள்ளேன். அத்தகைய துர்ப்பாக்கிய நிலைமைகளை ஒழிப்பதற்காகத்தான் இத்தகைய புலமைப் பரிசில் திட்டத்தை ஆரம்பித்தோம்.

கேள்வி:-

இப்பொழுது இந்த மகாபொல புலமைப் பரிசிலுடன் மேலும் பல கல்வித்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோடு சம்பந்தமான பல திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகிறது அல்லவா?

பதில்:-

ஆம், பல்கலைக் கழகத்திற்குச் செல்லும் மாணவர்களுக்கு மகாபொல மூலம் உதவும் அதே சமயம், பல்கலைக் கழகத்திற்குச் செல்லாத மாணவர்களுக்கும் உதவ வேண்டும் என சிலர் கோரிக்கை விடுத்தனர். அதிலிருந்து இரண்டு திட்டங்கள் உருவாகின. ஒன்றினை 'மகாபொல ஞான ஒளி' என்போம். அதுவும் உயர்தர வகுப்புப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர் பற்றிய சிந்தனை வயப்பட்டதுதான். இலங்கையில் ஆய்வு கூடம், மற்றும் நூலக வசதிகள் மிக்கதாக சுமார் 373 பாடசாலைகளே உள்ளன.

அத்துடன் உயர்தர பரீட்சைக்கு மாணவர்களை அனுப்பும் 1300 பாடசாலைகளும் உள்ளன. அப்பாடசாலைகள் மேற்படி வசதியீனங்களுடன் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இதனால் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகும் அனைத்து மாணவர்களும் ஒரே விதமாக - சமமான முறையில் கல்வி வசதிகளைப் பெற்றிருக்கவில்லை என்பது புலனாகின்றது. எனினும் அரசும் அதிகம் சேவை புரிந்துள்ளது. கல்வி அமைச்சும், கல்விச் சேவைகள் அமைச்சும் தம்மாலியன்ற சேவைகள் அனைத்தையும் புரிந்துள்ளன. அதனால் மகாபொல மூலம் குறைபாடுகள் உள்ள பாடசாலைகளுக்கு உதவ முன்வந்துள்ளோம். நூலகங்கள், ஆய்வு கூடங்கள் போன்ற வசதிகளை மகாபொல மூலம் செய்து கொடுக்க முன்வந்துள்ளோம். அவ்விதத்தில் நாம் முதன் முதலாக திறந்து வைக்கப் போகும் வைபவம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இரண்டாவது - 'மகாபொல ஞான தரிசனம்' என்னும் திட்டமாகும். அது கருத்தரங்க ரீதியிலானது. அதாவது உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கு குறிப்பாக வணிகவியல் கற்கும் உயர் வகுப்பு மாணவர்களுக்கு அது தொடர்பான விரிவுரைக் கருத்தரங்குகளை நடத்துவது. அதில் மகிழ்ச்சிக்குரிய விஷயம் என்னவென்றால் அத்தகைய விரிவுரைகளுக்கு நானும் போய் கலந்து கொள்வதுண்டு. அப்பொழுது அம்மாணவர்கள் என்னிடமும் கேள்வி கேட்பதற்கு நான் வழிவகுப்பதுண்டு. அதற்கு சந்தர்ப்பமளிப்பேன். அப்பொழுது என்னாலும் ஏதேனும் கற்றுக்கொள்ள வாய்ப்புண்டு.

இளைய தலைமுறை என்ன சிந்திக்கின்றது? எதனை விமர்சிக்கின்றது? அதனை எப்படிச் செய்கின்றது? என்பதனையெல்லாம் அறிய முடிகிறது. அதனால் இந்நாட்டிற்கு சிறந்ததொரு எதிர்காலம் இருப்பதையும் என்னால் உணர முடிகிறது. முன்னைப் பார்க்கிலும் இப்பொழுது ஆழமாக சிந்திக்கக் கூடிய ஆற்றல் மிக்க இளைய தலைமுறை ஒன்று உருவாகி வருவதையும் அறிய முடிகிறது. இதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்ததொரு சந்ததி உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதையும், அது சுயமாகச் சிந்தித்து செயலாற்றும் வல்லமை மிக்கது என்பதையும் புரிந்து கொள்ள முடிந்துள்ளது. அதற்கு நாம் வழி வகுத்துள்ளோம்.

கேள்வி:-

வர்த்தகத் துறையையும், கல்வித்துறையையும் சம்பந்தப்படுத்துதலன் மூலம் சாத்தியமான வெற்றிகரமான பலன்களைப் பெற முடியும் என்று கருதுகிறீர்களா?

பதில்:-

என்னால் அவ்விதம் கருத முடியும். அதே சமயம் என்னைவிட பொதுமக்களே அவ்விதம் கருத வேண்டும். இதில் நான் பொது மக்களின் முடிவையே ஏற்றுக்கொள்வேன். எனது கருத்தைவிட மக்களின் முடிவுதான் முக்கியமானது. இப்பொழுது இருக்கும் நிலையில் மக்கள் அதற்கு விருப்பமாக இருக்கிறார்கள் என்பது தெரிகிறது. மகாபொலவிழாக்களுக்கு எப்பொழுதுமே எதிர்பார்க்காத அளவிற்கு மக்கள் கூடுகிறார்கள். இதுவரையில் 99 மகாபொல விழாக்கள் நடந்துள்ளன. இதுவரையில் சுமார் ஒருகோடி மக்கள் இவ்விழாக்களை கண்டு களித்துள்ளனர் எனக் கருதுகிறேன். இது வரையில் புலமைப் பரிசில்கள் பெற்றவர்கள் இந்த 3000 பேருடன் மொத்தம் 7000 பேரளவில் இருக்கின்றனர். மகாபொல அதிர்ஷ்டலாபச் சீட்டுச்களும் எதிர்பாராதளவிற்கு விற்பனையாகின்றன. பெரும்பாலானோர் தியாக உணர்வுடன்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதம் பணம் கொடுத்து டிக்கட்டுக்களை வாங்கி வருகின்றனர் என்றே நான் கருது கின்றேன். இந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டின் மூலம் பரிசு பெறும் சிலர் தமக்குக் கிடைக் கும் பரிசு பணத்தில் ஒரு பகுதியை மீண்டும் மகாபொல திட்டத்திற்கே வழங்கியுமிருக் கிறார்கள். சிலர் பணம் அன்பளிப்புச் செய் கிறார்கள். இப்பொழுது மகாபொல பற்றி அதிகம் பிரசாரப்படுத்த வேண்டிய அவசிய மும் இல்லை. இதுபற்றி மக்கள் நன்கு அறிந்து வைத்துள்ளனர். இந்தத் திட்டம் மக்களுடையது. என்னுடையது அல்ல. அதற்கு உதவி புரிந்தது மட்டும்தான் எனது வேலை. அதனையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

கேள்வி:-

மகாபொல 5 ஆவது ஆண்டு நிறைவு விழாவையடுத்து மேலும் மேலும் கிராமப் புறங்களில் அத்தகைய விழாக்களை விஸ்தரிக் கும் நோக்கம் உண்டா?

பதில்:-

ஆம். இதுவரையில் 90 தொகுதிகளில் மகாபொலவை நடத்தியுள்ளோம். இன்னும் 78 தொகுதிகள் பாக்கி உள்ளன. கிராமப் புறத் தொகுதிகள் இன்னும் 55 உண்டு. அத் துடன் ஏற்கனவே மகாபொல விழா நடத் திய தொகுதிகளிலேயே மீண்டும் வந்து நடத்துமாறும் கோரிக்கைகள் வருகின்றன. எப்படி இருந்தபோதிலும் மீண்டும் அவ் விதம் அத்தகைய தொகுதிகளில் நடத்தும் போது சுமார் 2, அல்லது 3 இலட்சம் ரூபா நிதி சேகரிக்க முடியும் தான். மகாபொல புலமைப் பரிசில் கீர்த்திமிக்கது என்றே நான் கருதுகிறேன்.

கேள்வி:

மகாபொலவில் திரளும் பணத்தைக் கொண்டே அவ்வவ் பகுதிகளின் கல்வி நட வடிக்கைகள் கவனிக்கப்படும் என நினைக் கிறேன். வருகிற வருடத்தில் எத்தனை நப ருக்குப் புலமை பரிசில் கொடுப்பதாக உத் தேசம்?

பதில்:-

இம்முறை அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகளைப் பார்த்து கணிப்பீடு செய்து சொல்கிறேன். எப்படியும், 3000 பேருக்கு வழங்க முடியும். 1981 இல் வழங்கிய 423 புலமைப் பரிசில் போன்று மீண்டும் வழங்க சந்தர்ப்பம் கிட்டும். அத்துடன் அன்று அவ் விதம் புலமைப் பரிசில் பெற்றவர்கள் இந்த வருடம் பட்டதாரிகளாக வெளியேறுவார் கள் என எதிர்பார்க்கிறோம்.

கேள்வி:-

இந்த மகாபொல புலமைப்பரிசில் வழங் கும் போது அதற்கும் சில அரசியல் பின்ன ணிகள் இருப்பதாக சிலர் கருதுகிறார்களே?

பதில்:-

இல்லை; இல்லை. புள்ளிகளின் அடிப்படை யிலேயே புலமைப் பரிசில் தெரிவுகளை நடத் துகிறோம். 10 சதவீதம் திறமையின் அடிப் படையிலும், 90 சதவீதம் அம்மாணவர் களின் பொருளாதார நிலை கருதியும் வழங் கப்படுகின்றன. அதாவது, வங்கிக் கடன் பெறத் தகுதியுள்ளவர்கள் எனக் கருதப்படு பவர்களை தெரிவு செய்தே இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட முறையில் புலமைப் பரி சில் வழங்குவோம். சகல பிரதேசங்களையும் சீர்தூக்கிப் பார்த்தே வழங்குவோம். எந்த வொரு அரசியல் கட்சியினதும் கருத்துக்களை கேட்டு இக் காரியத்தை நாம் செய்வதில்லை. மகாபொல சபையில் சட்ட பூர்வமான செயற்பாடுகளே நடைபெறுகின்றன. பிர தம நீதியரசர்தான் அச்சபையின் தலைவர். அதில் அங்கம் வகிப்போர் அரசியலுக்கு அப் பாற்பட்டவர்கள். ஒருவர் மட்டும் அரசிய லுடன் சம்பந்தமானவர். அவர் நான் மட்டும் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி:-

மகாபொல புலமைப் பரிசில் பெறும் எமது பட்டதாரி மாணவர்களுக்கும், எமது மாணவர் சமுதாயத்திற்கும் இச்சந்தர்ப்பத்தில் என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில்:-

எமது நாட்டிற்காக உங்கள் கல்வி அறிவைப் பெருக்கிக் கொள்ளுங்கள் என்றுதான் கூற விரும்புகிறேன். நாட்டை தனிநபர் ஒருவரால் கட்டி எழுப்ப முடியாது. என்னதான் ஒரு தனி நபர் சிறந்த மனிதனாக இருந்த போதிலும் அவர் ஒருவரால் தனித்து நின்று நாட்டை முன்னேற்ற முடியாது. அனைத்து மக்களும் ஒரே மாதிரியாக சிந்தித்து ஒன்றுபட்டு செயல்பட்டால் தான் நாடு முன்னேறும். இந்நாட்டு மக்களிடம் அறிவுண்டு. சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் கடுமையாக உழைக்கக்கூடிய ஆற்றலும் அவர்களுக்குண்டு. எம்மிடம் இன்று தேவை தியாக உணர்வும், ஐக்கிய மனப்பான்மையும்தான். எம்மை எவருக்கும் குறிப்பாக அந்நிய நாடுகளுக்கு ஈடு வைக்க அனுமதிக்க வேண்டாம். புத்தகங்கள் பத்திரிகைகளில் என்னதான் எழுதப்பட்டிருந்தாலும் அவற்றை நுட்பமாக ஆராய்ந்து படியுங்கள். அவ்விதம் செயல்பட்டால் எமது நாட்டின் எதிர்காலம் சுபிட்சமாக இருக்கும் என்று கூறுகிறேன். அத்துடன் நம்பிக்கையான எதிர்காலம் வரவேண்டும் எனவும் பிரார்த்திக்கிறேன். எமது நாடு வருமானத்தைப் பொறுத்தவரையில் 3ஆம் மண்டல நாடு. அதே சமயம் பல வழிகளிலும் முன்னேற்றமடையக் கூடிய நாடு. இனி வரும் 10, 20 வருடங்களுக்குள் உன்னதமான நிலையை எமது நாடு அடையும் என்பது திண்ணம். அதற்கு அனைவரும் தமது ஆதரவையும், ஒத்துழைப்பையும் நல்க வேண்டும்.


**எமது அடுத்த இதழின் மையப் பொருள் "கமத் தொழிலும் இளைஞரும்".**

**உங்கள் கட்டுரைகளை வரவேற்கின்றோம்.**

**தரமானவற்றுக்கு சன்மானம் வழங்கப்படும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதி அவர்கள் புலமைப் பரிசில் வழங்கினர்

# மகாபொலவின் வேண்டுகோள்

நாம் அனைவரும் மனிதர்கள். எம்மிடையே என்னதான் குறைபாடுகள், ஏற்றத்தாழ்வுகள் இருந்த போதிலும் நாம் மனிதர்கள்தான். ஒருவரது துயரம் கண்டு கண்ணீர் சிந்துவதற்கும் ஒருவரது மகிழ்ச்சி கண்டு களிப்படைவதற்கும் நாம் எம்மை எப்பொழுதும் மனிதாபிமான உணர்வுகளுடனேயே வைத்துள்ளோம்.

ஒரு மனிதன் தெய்வமாவது கூட அத்தகைய மனிதாபிமான உணர்வுகளினால்தான்.

இல்லாதிருப்பவருக்கு இருப்பவர் கொடுப்பதும், தாழ்ந்து போயிருப்பவரை உயர்ந்துள்ளவர் உயர்த்துவதும் ஒருவருக்கு ஒருவர் கைகொடுத்து ஆதரவு காட்டுவதும் தான் எம்மத்தியில் உள்ள உயர்ந்த மனிதாபிமான குணாதிசயமாகும்.

## உன்னதமான செயற்பாடு

உங்களிடம் குடி கொண்டுள்ள கருணையும், மனிதத் தன்மையும் வெளிப்படுவதற்கு மற்றுமொரு சந்தர்ப்பம் உதயமாகியுள்ளது. உங்களால் முடிந்தவரையில் உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கான ஆதரவு நிதிக்கு உதவி செய்யுங்கள். அதன் நோக்கம் திறமையுள்ள பொருளாதார நெருக்கடிகளினால் பாதிப்படைந்துள்ள மாணவர்களுக்கு உதவி செய்வதுதான்.

இலங்கையைப் பொறுத்த வரையில் எமது சமுதாயத்தில் ஒருவரின் உயர்கல்விக்காக உதவுவது போன்ற புண்ணியமான செயல் வேறு ஒன்றுமில்லை. அதனை வழங்குவதற்கும், பெறுவதற்கும் எமது நாட்டு மக்கள் அனைவரும் பாக்கியம் செய்தவர்கள்தான்.

## ஏழ்மையைப் போக்குதல்

இலங்கை இன்று எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினைகளில்ஒன்றுதான் வறுமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவனோபாயத்திற்கு வழிகாணும் அதே சமயம் இந்நாட்டு மக்களுக்கு விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப அறிவைப் பெருக்க வேண்டியது அவசியம். மக்கள் முன்னேறும் போது நாட்டிலும் செல்வம் கொழிக்கும்.

மகாபொல உயர் கல்விப் புலமைப் பரிசில் பங்காளிகளாக நாம் மாறுவதும் உன்னதமான செயற்பாடுதான். அந்நோக்கத்தை நாம் நிறைவேற்றும் பட்சத்தில், உங்களுக்கும், உங்கள் குழந்தைகளுக்கும் சிறந்த சுபீட்சம் கிட்டும் என்பது நிச்சயம்.

திரு. லலித் அத்துலத்முதலி அவர்கள் 1980ம் ஆண்டளவில் இத்தகைய திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு அடிப்படைக் காரணியாயிருந்தது கூட வரப்பிரசாதம் கிட்டாத இலங்கை மக்களுக்கு - குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு நன்மை அளிக்க வேண்டும் என்பதுதான்.

17 வருட காலமாக கட்டுப்படுத்தப்பட்டிருந்த பொருளாதாரம் திறந்த பொருளாதாரக் கொள்கையாக மாற்றம் பெற்ற போது அதனால் நகரப்புற வாசிகளே பெரிதும் பயன் பெற்று வந்தனர். ஆனால், மகாபொல திட்டம் உதயமானதன் பின்னர் அது கிராமப்புறங்களில் வசித்தவர்களுக்கும் நன்மைகளைப் பெற்றுக்கொடுத்தது.

## மகாபொல - 100

இது வரையில் வெற்றிகரமான முறையில் 99 மகாபொல விழாக்கள் நடந்தேறியுள்ளன. இனிமேலும் அவ்விதம் நடைபெறும். ஒவ்வொரு மகாபொல விழாவும் நடைபெறும் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் அதன் மூலம் பெறப்படும் நிதியினால் அபிவிருத்தியுறும். அத்துடன் ஒரு பகுதி புலமைப் பரிசிலுக்கும், மிகுதி பாடசாலைகளில் ஆய்வுகூடம், நூலகம், விளையாட்டு மைதானம் போன்ற தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும்.

கல்வித்துறையை முன்னேற்றுவதன் மூலம் இலங்கையில் ஏழ்மையையும் ஒழித்து விடலாம் என்று கருதியே உயர்கல்விக்கான புலமைப் பரிசில் திட்டம் உருவாகியது.

1981ஆம் ஆண்டு ஜனவரி 11ஆம் திகதியன்று இழுக்கப்பட்ட மகாபொல அதிர்ஷ்டச்சீட்டு இழுப்பின் மூலம் ரூபா 70 இலட்சத்திற்கும் அதிகமான பணம் சேகரிக்கப்பட்டது. அத்துடன் அன்பர்கள் மற்றும் நிறுவனங்கள் மூலமும் அத்திட்டத்திற்கு மேலும் நிதி சேர்ந்தது. அதேவேளை மேலும் உதவி வழங்கும் வாக்குறுதிகளும் பலரால் தரப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

## மகாபொல உயர்கல்வி நிதியம்

இந்த நிதியம் 1981 பெப்ரவரியில் தனிநபர் நிதியமாகத்தான் ஆரம்பமாகியது.

அந்த நிதியத்தின் மூலம் முதல் முறையாக 1982 நவம்பர் 14ஆம் திகதி புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன. அப்பொழுது நிதி உதவி தேவைப்பட்ட 66 பேருக்கும், திறமை அடிப்படையில் 45 பேருக்கும் அவ்வாறு வழங்கப்பட்டது. இரண்டாம் குழுவினருக்கும் அவர்களின் முழுமையான கல்விக்காலத்திற்கு மாதத்திற்கு 400/-ரூபா வீதமும். முதல் குழுவினருக்கு மாதாந்தம் 350/-ரூபா வீதமும் வழங்கப்பட்டது.

புலமைப்பரிசில் சம்பந்தமான அனைத்து விண்ணப்பங்களையும் பரிசீலனை செய்யும் பணி பல்கலைக்கழகத்தின் மானிய ஆணைக் குழுவைச் சார்ந்தது.

## பாராளுமன்றச் சட்டம்

இத்தகையதொரு புலமைப் பரிசிலுக்கு விசேட அந்தஸ்து வழங்க வேண்டும் என்று அரசாங்கம் தீர்மானித்தது. அதன் பிரகாரம் மகாபொல உயர்கல்விக்கான புலமைப் பரிசில் நிதியம் என்ற பெயரில் ஒரு சட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது அத்துடன் அரசியல் அமைப்பிலும் சேர்க்கப்பட்டது. அந்த நிதியத்தை பரிபாலிப்பவர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்;-

(அ) பிரதம நிதியரசர் (தலைவர்)

(ஆ) நிதியத்தை உருவாக்கியவர்

(இ) உயர்கல்விஅமைச்சின்செயலாளர்

(ஈ) வர்த்தக கப்பற்றுறை அமைச்சின் செயலாளர்

(உ) பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் தலைவர்

(ஊ) நிதியத்தை உருவாக்கியவரால் 5 வருட காலத்திற்குத் தெரிவு செய்யப்படும் இரண்டு பிரதிநிதிகள்.

## நிதியத்தின் நோக்கமும், திட்டமும்

1. இளைய தலைமுறையினரின் உயர்கல்விக்கு வசதி செய்து கொடுத்தல்.

2. உயர்கல்வி நிலையங்களுக்குத் தேவையான தொழில் நுட்ப சாதனங்களைப் பெற்றுக் கொடுப்பதுடன், அதற்குத் தகுதிவாய்ந்த இளைய தலைமுறையினருக்கு உதவி வழங்கி அவர்களை முன்னேற்றுதல்.

3. தொழில் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதும், அதற்குப் பலவழியிலும் உதவுவதும்.

4. கல்வித்துறையை முன்னேற்றுவதற்காக பாடசாலைகள், நிறுவனங்கள் ஆகியவற்றை உருவாக்குவதுடன் அதற்கு உதவி புரிதல்.

5. கல்வித்துறையில் தேர்ச்சி பெற்றோரை மேலும் நிபுணர்களாக்குவதற்கு உதவுதல்.

## வரி வசதி

இந்த நிதியத்திற்கு உதவுவதன் மூலம் வருமான வரி மற்றும் செல்வவரி என்பன நீக்கப்படும். அத்துடன் இந்த நிதியம் 1980ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க அபிவிருத்திச் சபை சட்டத்தின் கீழ் கட்டணம் மற்றும் வரிவிதிப்பிலிருந்து விலக்கு பெறும். இந்த நிதியத்திற்கு உதவும் அனைவரும் பங்காளர்கள்தான்.

1. நன்கொடை வரியிலிருந்துவிலக்கு உண்டு

2. அந்த நன்கொடை உதவி 1979 உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 28ஆவது பிரிவின் பிரகாரம் வரிவிலக்குக்குரியது எனக் கருதி முழுமையாகவே வரிவிலக்களிக்கப்படும்.

ஒரு புலமைப் பரிசில் 45 ஆயிரம் ரூபாவிலிருந்து 50 ஆயிரம் ரூபா வரையில் இருக்கும்.

இத்தகைய உன்னத நிதியுதவிக்கு நன்கொடை அளிக்க விரும்புவோர், தாம் வழங்கும் நிதிக்கு வரிவிலக்குப் பெறவிரும்பினால் கொழும்பு - வொக்ஷோல் வீதியில் இருக்கும் வர்த்தக கப்பற்றுறை அமைச்சின் செயலாளர் பெயரில்:- மகாபொல உயர்கல்வி நிதியத்திற்கு உங்கள் நிதியை அனுப்புங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

# வாழ்க்கையின் கனவில் மலர்ந்த புதுமலர்

"பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்த எனது மகனது செலவினங்களை சமாளிக்க முடியாமல் அவனை அங்கிருந்து திருப்பி அழைப்பதற்கு நான் தீர்மானித்திருந்தேன். எனினும் புலமைப் பரிசில் உதவி ஒன்று அவனுக்கு கிட்டி விட்டதை அறிந்து எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தேன்" என்று ஒரு தாய், பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடந்த வைபவம் ஒன்றின்போது தெரிவித்தார்.

மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் வைபவத்தின் போதே மேற்படி சம்பவம் நிகழ்ந்தது. அந்தத் தாயார் அவ்விதம் கூறும்போது அவரது முகத்தில் நம்பிக்கை ஒளிவீசியதை அவதானித்தோம்.

நாம் அவ்விருவரிடமிருந்தும் மேலும் பல தகவல்களை அறிந்தோம். அவர்கள் தொடங்கஸ்லந்தையில் உள்ள கவிசிகமுவவைச் சேர்ந்தவர்கள். அம்மாணவரின் பெயர் டக்ளஸ் பொன்சேகா. அவர் கவிசிகமுவ மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கல்விப் பாடத்திற்கு தெரிவானவர். ஆறு பிள்ளைகள் கொண்ட குடும்பத்தில் அவர்தான் மூத்தவர். அவரின் தந்தைக்கு நிரந்தரமான தொழிலோ, நிரந்தர வருவாயோ இருக்கவில்லை. சொந்தமாக நில புலன்களும் இல்லை.

"மகன் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானபோது நாம் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தோம். அதே சமயம் அவரது உயர் கல்விக்குத் தேவையானதை பெற்றுக் கொடுக்க எம்மிடம் பணவசதியில்லையே என்று பெரிதும் கவலையுற்றோம். அப்பொழுது எமது அயலவர்களிடம் எனது மகனை அனுப்பி வெற்றிலை கொடுத்து அவர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான நற்செய்தியை கூறினோம். எமது வறுமை நிலை உணர்ந்த உறவினர்கள், அயலவர்கள் எமக்கு உதவி முன்வந்தனர்" என்று அந்தத் தாய் கூறினார்.

'நான் இதோ அணிந்திருக்கும் உடை மற்றும் சப்பாத்து ஆகியவையும் எமது அயலவர்கள் எனக்குத் தந்த அன்பளிப்புகள் தான்" என்று அம்மாணவனும் நன்றிப் பெருக்கோடு தெரிவித்தார்.

"நாம் எமக்கென்று ஒரு வீட்டை கட்டுவதற்கென சில பொருட்களையும் சேகரித்தோம். அச்சந்தர்ப்பத்தில் எனது மகனுக்குரிய புலமைப்பரிசிலைப் பெறுவதற்கு கொழும்பு வரவேண்டியதாயிற்று. அதற்கு பணவசதி இல்லாதிருந்தமையால் வீடு கட்டுவதற்கு வாங்கி வைத்திருந்த ஓடுகளைக் கூட விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது" என்று அந்தத்தாய் கூறும்போது அவருக்கு மகனின் கல்வியில் இருந்து மேலான அக்கறையை நாம் மெய்சிலிர்க்கப் புரிந்து கொண்டோம்.

மேற்படி புலமைப்பரிசிலைப் பெறுவதற்கு வந்திருந்த ஆலி எல - போகஹமடித்தே ஏ. எம். வீரசிறி என்னும் மாணவனுடனும் நாம் உரையாடினோம். அவரது தந்தை உடுவர அபிவிருத்திச்சபை உப அலுவலகத்தின் ஊழியராவார். அவரின் மாதாந்த வருமானமோ 400/- ரூபாதான். ஆனால், அவர் குடும்பத்தில் பிள்ளைகளின் எண்

— உதய மானவசிங்க —

தேசிய பாதுகாப்பு அமைச்சின்
தகவல் தொடர்பு அதிகாரி

ணிக்கை ஆறு. வீரசிறி இக்குடும்பத்தில் மூத்த பிள்ளையாவார். தெமோதர நாவுல்ல மகாவித்தியாலயத்திலிருந்து அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உயிரியல் பீடத்திற்கும், அவரது இளைய சகோதரன் பேராதனை பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கும் தெரிவாகியிருந்தனர்.

இச்சந்தர்ப்பத்தில், ஒரே சமயத்தில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகியுள்ள இரண்டு பிள்ளைகளுக்கும் தமது தந்தை எவ்விதம் செலவு செய்யப் போகிறாரோ தெரியவில்லை என்று வீரசிறி மிகுந்த கவலையடைந்தாராம். அதனால் இந்த மகாபொல புலமைப்பரிசிலை ஒரு வரப்பிரசாதம் என்றே தாம் கருதுவதாகவும் அவர் சொன்னார்.

ஒருவருக்கொருவர் சமதையான முறையில் கல்வியில் முதிர்ச்சியடைந்த வீரசிறியின் குடும்பத்தின் கதை மிகவும் துயரமானது. அவ்விருவரும் பல்கலைக்கழகத்திற்குப் பிரவேசித்தபோது அதற்கான செல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிலங்களைச் சமாளிக்க தாயார் கல் உடைக்கும் தொழிலைக்கூட செய்ய வேண்டியதாயிற்று.

''எமது செலவினங்களுக்காக அம்மா ஓரிடத்தில் கல் உடைக்கும் தொழிற்சாலைக்கு வேலைக்குச் சென்றார் எமது இளைய சகோதரன் கூட பாடசாலை விட்டதும் அங்கு போய் வேலை செய்தான்'' என்று வீரசிறி கூறினார்.

பார்வையுடன் பிறந்து, உலகினைப் பார்த்து இரசித்து அனுபவிக்கும் வேளையில் எதிர்பாராத விதமாக பார்வையை இழந்த ஒரு மாணவருக்கும் புலமைப்பரிசில் கிடைத்தது. அதாவது வர்த்தக கப்பற்றுறை அமைச்சராக இருந்த திரு. லலித் அத்துலத் முதலி அவர்கள் தமது பெற்றோரின் நினைவாக தனிப்பட்ட முறையில் வழங்கிய புலமைப் பரிசில்தான் அந்த கண்பார்வை இழந்த மாணவருக்குக் கிடைத்தது. களனிப் பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்திற்கு தெரிவாகியுள்ள இம்மாணவரின் பெயர் யூ டி. என். ஜயரத்ன.

தனது மூன்றுவது பராயத்திலே போஷாக்குக்குறைவினால் தான் கண்பார்வையை இழந்ததாக அம்மாணவர் கூறினார். எனினும் ஒரு கண்ணுக்குப் பார்வை அளிப்பதற்காக சிகிச்சை நடந்த போதிலும் அது வெற்றியளிக்கவில்லை. கண் பார்வை இல்லாத போதிலும் தனது சுய ஆற்றலினால் முன்னேறி புலமைப்பரிசிலை தான் பெற்றது உண்மையிலேயே வாழ்க்கையில் கிட்டிய வெற்றியாகக் கருதுவதாகத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான ஏ. இராமநாதன் என்னும் மாணவரை கேட்ட போது, ''மகாபொல புலமைப் பரிசில் எனக்குத் கிடைத்ததால் எனது தாய்க்கு இருந்த பொருளாதாரச் சுமைகள் குறைந்து விட்டன'' என்றார்.

''பல்வேறுபட்ட பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் எம்மைப் போன்ற ஏழைக் குடும்பங்கள் கஷ்டப்படும் வேளையில் வர்த்தக கப்பற்றுறை அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி இத்தகைய ஒரு திட்டத்தை தோற்றுவித்ததானது அவர் ஒரு தெய்வ அவதாரமாக எமக்குக் காட்சியளிப்பதாகவே படுகிறது'' என்று றுஹுணு பாந்தோட்டையிலிருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றுள்ள ரிதியகம கமகே லயனல் பேமசிறி கூறினார்.

அன்று அந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க 1981ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி அவர்களிடமிருந்து புலமைப் பரிசில்களைப் பெற்றவர்களே மேலே நாம் குறிப்பிட்ட மாணவர்களாவர். அன்றைய அந்த வேளையில் 412 மாணவர்களுக்கு அவ்விதம் புலமைப்பரிசில் கிடைத்தது. அதில் கூடுதலாக எமது நாட்டின் சாதாரண விவசாய குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகளே இருந்தனர்.

இலங்கை மாணவர் சமுதாயத்திற்கே துணைபுரியும் விதத்தில் தோற்றுவிக்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் ஏழை மாணவர்கள், திறமை மிக்க மாணவர்கள் பலரும் பயனடைந்து வருவது நாடறிந்த விடயம்.

அத்தகைய உன்னத நோக்கத்தின் தோற்றுவாயான மகாபொல வைபவம் முதன் முதலில் பிரதி வர்த்தக கப்பற்போக்குவரத்துத்துறை அமைச்சரான திரு. எம். எஸ். அமரசிறியின் தொகுதியான ஹினிதுமவில் வெற்றிகரமாக நடைபெற்றது. அதன் பின்பு 40 தொகுதிகளில் நடைபெற்று பாவனையாளர் பாதுகாப்பு இயக்கமாக மாறியது.

அதன் மூலம் பாவனையாளர்கள் குறிப்பிட்ட கட்டுப்பாட்டு விலைக்கே பொருட்களை வாங்குவதற்கும், அவற்றை விலை கொடுத்து வாங்குவது தொடர்பான சட்ட திட்டங்கள் போன்ற பூரண விளக்கங்களை அறிந்து கொள்வதற்கும் வழியேற்பட்டது. மகாபொல அனுமதிச்சீட்டணத்தின் மூலம் அது நடைபெறும் பாடசாலைகளும் பல வழிகளில் பயன் பெற்றன. இன்னும் மூன்று நான்கு வருடங்களில் புலமைப்பரிசில்பெற்ற மாணவர்களில் சுமார் 112 பேர் டாக்டர்களாகவும், பொறியியலாளராகவும் மற்றும் கல்வித்துறை சம்பந்தமான நிபுணர்களாகவும் வெளியேறுவார்கள்.

இக்கதையினை ஆரம்பம் முதல் இறுதி வரையில் சுருக்கமாகக் கூறுவதாயின் மகாபொலவின் மூலம் புலமைப் பரிசில்கள் கிடைத்தன. உணவு மற்றும் பொருட்களின் மூலம் மகாபொல சிறப்பாக இயங்கியது. அப்பொருட்களையும் தங்கு தடையின்றி இறக்குமதி செய்வதற்கு திறந்த பொருளாதாரக் கொள்கை வழிவகுத்தது. எனவே, குறிப்பிட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை இல்லையெனில் மகாபொலவும் இல்லை. ஏழை எளிய மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களும் இல்லை எனபது நன்கு தெளிவான உண்மையாகிவிட்டது.

மகாபொலவும் அதிலிருந்து தோன்றிய புலமைப் பரிசில் நிதியமும், அது தொடர்பான செயறதிட்டங்களும் இலங்கையில் வர்த்தகத் துறையுடன் பின்னிப் பிணைந்துள்ளதை இக்கதை மூலம் அறிகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வை இழந்தபோதிலும்......

கண் பார்வையற்ற மாணவனுன நான் களனி பல்கலைக்கழகத்தில் 1981–82ஆம் ஆண்டில் சேர்ந்தேன். பொத்துஹெர மகா வித்தியாலயத்தில் உயர்வகுப்பில் தேர்ச்சியடைந்த எனக்கு தங்களால் தனிப்பட்ட முறையில் புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளதாக வானெலி மூலமும், பத்திரிகைகள் மூலமும் அறிந்து கொண்டேன். எமது குடும்பத்தில் நிலவும் உக்கிரமான பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் உங்களால் வழங்கப்பட்ட இப்புலமைப்பரிசிலை ஒரு வரப்பிரசாதமாகவே கருதுகிறேன். அத்தகைய ஓர் உன்னத உதவியை எனக்குச் செய்தமைக்காக நான் எனது பணிவான நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் அதன் மூலம் நான் பெறும் பயனை நாட்டுக்கும், மக்களுக்கும் கிட்டுவதற்கேற்றவாறு நான் பணியாற்றுவேன் என்றும் தங்களுக்கு உறுதி கூறுகிறேன். எனது பெற்றோர், உற்றார், நண்பர்கள் சார்பிலும் எனது உளப்பூர்வமான நன்றியை மீண்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.



**யூ. டீ. என். ஜயரத்ன,**

(அமைச்சருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் ஒரு பகுதி)

# இளைய சகோதரரின் கல்வி பாதிக்கவிருந்த வேளையில்...

நான் மருத்துவக் கல்லூரிக்கு அனுமதிபெற்ற சமயத்தில் ஒரு புறத்தில் மகிழ்ச்சியடைந்த அதே சமயம், மறுபுறத்தில் மிகுந்த கவலையுற்றேன். காரணம்: எனது மூத்த சகோதரன் பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வி கற்கும் அதே வேளையில் எனது உயர் கல்விக்காகவும் பணம் தேவைப்படும்போது என் இளைய சகோதரர்கள் இருவரதும் கல்வி பாதிக்கப்பட்டுவிடலாம் என்பதே.

அத்தகைய சந்தர்ப்பத்தில் எனக்கும் மகாபொல புலமைப்பரிசில் கிடைத்ததையிட்டு மிக்க மகிழ்ச்சியடைந்தேன். உங்களுக்கு புண்ணியம் கிடைக்கும் என்றே இம் மாணவர்கள் கூறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

உங்களது கடாட்சத்தால் நான் ஒரு டாக்டராக வெளியேறிய பின்பு பாரபட்சம் காட்டாமல் அனைவருக்கும் ஒரே மாதிரியான சேவை புரிவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஏ. எம். சி ஜே. அத்தநாயக்க**
**திவுலப்பிட்டிய.**

## கோடிக்கணக்கில் சேரட்டும்



பல்கலைக்கழக மாணவர்களின் இன்னும் 700 பேருக்கு புலமைப்பரிசில் கிட்ட வேண்டும் என இரண்டாம் கட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்பனையை ஆரம்பித்து வைத்து முதல் டிக்கட்டை அமைச்சர் திரு. அத்துலத்முதலியிடமிருந்து ஜனாதிபதி பெற்றுக் கொள்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவனையாளரைப் பாதுகாக்கும் மகாபொல திட்டம்

மகாபொலவின் மூலம் பாவனையாளர்களுக்குக் கிட்டும் நன்மைகள் சகல வர்த்தக கூட்டுத்தாபனங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் வர்த்தக ரீதியிலாக பெறக்கூடிய தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளும். இந்தத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு நடமாடும் மகாபொலவில் பொருத்தமான செயற் திட்டங்கள் உண்டு. இவ்வகையில் கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச் சங்கங்களும், செயற்படும் வேளையில் பாவனையாளர்களுக்குக் கிட்டும் பெறுபேறுகளையும் மறந்துவிட இயலாது. இச்சந்தர்ப்பத்தில் பாவனையாளர் பற்றி நாம் சற்றுச் சிந்தித்தல் நல்லது.

இக் கூட்டுறவு இயக்கங்களுக்கும், பாவனையாளர்களுக்குமிடையே உள்ள இரு பக்கத் தொடர்புகளை ஆராய்தலும் நல்லது. இந்த இயக்கங்களிலும் பார்க்க மகாபொல லூடாக பாவனையாளர்கள் பெறும் நன்மைகள் மிகப்பல.

மகாபொலவுடன் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் தொடர்பு கொண்டுள்ளன. பெரும்பாலும் பாவனையாளர்கள் ஒரு வர்த்தகர் அல்லது ஒரு பிரதிநிதி மூலமே பண்டங்களைப் பெற முடியும். சாதாரணமாக ஒரு பொருளை பாவனையாளர் வர்த்தகச் சந்தையில் வாங்கும்போது அதன் உற்பத்தி நிறுவனமோ அல்லது அதன் இறக்குமதி நிறுவனமோ அவர் மீது அக்கறை கொள்வதில்லை. ஆனால், மகாபொலவில் நிலைமை அப்படி அல்ல. உற்பத்தி நிறுவனமும் இறக்குமதி நிறுவனமும் பாவனையாளர்களுடன் ஏதோ ஒரு விதத்தில் தொடர்பு கொள்கின்றது. அந்நியோன்னிய உறவும் அதன் மூலம் ஏற்படுகிறது.

கூட்டுத்தாபனம் அல்லது வர்த்தக நிலையம் என்பன வணிகக் கண்ணோட்டத்துடனேயே தமது பண்டங்களை விற்பனைச் செய்யும். அத்தகைய நிறுவனங்கள் தமது விற்பனைப் பொருட்களை சிறந்த விளம்பரங்களின் மூலமே விற்கும். சர்வதேச ரீதியில் களியாட்ட விழாக்கள் நடைபெறும்போது சில வர்த்தக நிலையங்கள் தமது விற்பனையை அதிகரிப்பதற்காக விளம்பரத்திற்கென அதிகம் பணம் விரயம் செய்வதுண்டு. இதற்கான கேள்விப் பத்திரங்களும் கோரப்படுவதுண்டு. போதிய வருவாய் இல்லாத போதிலும் சில பண்டங்களுக்கு இதன் மூலம் நல்ல விளம்பரம் கிடைப்பதுமுண்டு. விளம்பரத்திற்கென பொது சனத் தொடர்பு சாதனங்கள் பலவும் நன்கு பயன்படுத்தப்படுவதுமுண்டு. சுவரொட்டிகளின் மூலமும் விளம்பரம் தேடப்படும். எனவே, போட்டா போட்டி வர்த்தகமாக இது மாறும்பொழுது விளம்பரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஆனால், நடமாடும் மகாபொல போன்ற விளம்பர சாதனம் வேறொன்றும் இல்லை என்றுதான் இங்கு கூறவேண்டும். நடமாடும் மகாபொல பற்றி ஆராயும்போது அதிலும் விளம்பரம் இருப்பதை அறிய முடிகிறதல்லவா?

பாவனையாளர்களில் 80 சதவீதமானவர்கள் கிராமப்புறங்களிலேயே இருப்பதனால் அங்கு அது பற்றி விளம்பரம் செய்விப்பது அவசியமாகின்றது. எனவே, அத்தகைய பாவனையாளர்கள் மேலே குறிப்பிட்டது போன்று தயாரிப்பாளர்களையோ, விநியோகத்தர்களையோ சந்திக்க வாய்ப்பில்லை. ஆனால், அத்தகைய ஒரு சந்திப்பு நடமாடும் மகாபொல மூலம் கிட்டுகின்றது. சில சந்தர்ப்பங்களில் கிராமப்புற பாவனையாளர்கள் என்றைக்குமே அறிந்திராத, கேட்டிராத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டங்கள், தயாரிப்புகள் பற்றி இதன் மூலம் அறிவதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது.


ஒரு பொருளைப் பற்றிய அல்லது உபகரணத்தைப் பற்றிய அல்லது இயந்திரத்தைப் பற்றிய அறிவினைக் கூட மகாபொல மூலம் மக்கள் பெறக்கூடியதாயிருந்தது. உதாரணமாக ஒரு மகாபொல கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த 'இரத்தினக் கல் தீட்டும்' இயந்திரம் அங்கு பலரைக் கவர்ந்தது. பின்பு அது போன்று தாங்களும் வாங்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி அதனை வாங்குவதற்கான விண்ணப்பங்கள் வந்து குவிந்தன. எனவே, மகாபொல பலவிதத்திலும் நன்மை பயப்பதாகவே விளங்குகின்றது.

பிரிட்டனில் பல கைத்தொழில் நிறுவனங்கள் முன்னர் பொருட்களைத் தயாரித்து விட்டுப் பின்னர் அவற்றை சந்தையில் விற்பதில் தோல்வியடைந்தன. இப்பொழுது இந்த நடைமுறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

நவீன வர்த்தகம், நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட உற்பத்திகளையே நாடியது. அதனால், நன்கு பரீட்சித்துப் பார்க்கப்பட்ட தயாரிப்புகளுக்கு முன்னுரிமை வழங்குவது முக்கியத்துவம் பெற்றது. பல்லின கூட்டுறவு அமைப்புகள் இதற்காக உழைத்தன. இந்நிலையில்தான் மகாபொலவினூடாக பல நிறுவனங்கள் மக்களை நாடி அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தன. மண் வெட்டி போன்ற விவசாயக் கருவிகள் கூட பிரதேசங்களுக்கு ஏற்ற விதத்தில் தயாரிக்கப்பட்டு விற்கப்பட்டன.

அடிப்படையான தேவைகள் பல உள்ள இலங்கை போன்ற நாட்டில் முதன்மையான தேவைகள் தவிர்த்து ஏனையவற்றில் மாற்றங்கள் ஏற்படலாம். அதாவது சில உற்பத்திகளின் பயன்பாடுகளில் பிரதேச மாற்றமும் இருக்கலாம். எனவே, மகாபொலவில் விற்கப்படும் பொருட்களைக் கூட அந்தந்தப் பகுதி மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ப தயாரித்துக் கொடுக்க முடிகிறது. இதனால் மக்கள் நன்மை அடைகிறார்கள். பாவனையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ற விதத்தில் நிறுவனங்களும் மகாபொலவில் அங்கம் வகிக்கின்றன. கூட்டுறவு அமைப்புகள் மற்றும் மக்கள் கடைகள் என்பனவும் வர்த்தகம் தொடர்பான அனுபவ ரீதியான அறிவினைப் பெற்று சமூக பொருளாதார அமைப்பின் மாற்றங்களுக்கு ஏற்ப சேவையாற்றி வருகின்றன.

புதிய வர்த்த முறையானது தளர்த்தப்பட்ட நிலையிலும் போட்டா போட்டி அடிப்



மகாபொல கண்காட்சியொன்றில்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.............

படையிலும் இருப்பதை பலரும் வரவேற்கின்றனர். இதில் பாவனையாளர்களுக்குக் கிட்டும் நன்மையே முதன்மையானது. தனிப்பட்ட நபர்களின் வர்த்தக சந்தையில் பொருட்களைத் தெரிவு செய்து வாங்கும் உரிமை மக்களுக்கு அதிகம் இருப்பதில்லை. ஆனால், மகாபொலவிற்கு வரும் பாவனையாளர்கள் எதனையும் தம் விருப்பம்போல் பார்த்து தெரிவு செய்து வாங்க முடிகிறது,

எனவே, நுகர்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. ஒரு அமைச்சின் கீழ் உள்ள பல நிறுவனங்களும் கூட போட்டா போட்டி அடிப்படையில் தமது பணிகளை விஸ்தரிப்பதற்கு இது ஏதுவாகின்றது. இந்த நடமாடும் மகாபொலவில் காப்புறுத்திக்கும் வழி வகுக்கப்பட்டுள்ளது. மேலைத்தேய நாடுகளில் கப்பல் காப்புறுதி, மற்றும் வர்த்தகப் பொருட்களின் காப்புறுதி தொடர்பாக ஆசியாவுக்கு புதியவர்த்தக காப்புறுதி நடைமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளன.

மேலைத்தேய நாடுகளில் ஏற்பட்ட வர்த்தக போட்டிகள் இப்பொழுது கம்யூனிஸ நாடுகளுச்கும் பரவியுள்ளன. அதே சமயம், நிகழ் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட காப்புறுதித் திட்டமானது போட்டா போட்டி வர்த்தக சந்தையில் நல்ல பலனை அளித்து வருகின்றது. நடமாடும் மகாபொலவின் மூலம் இந்த காப்புறுதி சம்பந்தமான அறிவு கிராமப்புற மக்கள் மத்தியிலும் பரவி வருவதை அவதானிக்க முடிகிறது. ஒவ்வொரு நடமாடும் மகாபொலவிலும் அமைந்துள்ள காப்புறுதிக் கிளை அலுவலகங்களின் மூலம் சுமார் 150க்கும் 200க்கும் இடைப்பட்டோர் தம்மைக் காப்புறுதி செய்துள்ளனர். இதனால் அதற்கு மேலும் விளம்பரம் கிடைக்கிறது. அது பற்றிய விசேட அறிவினையும் மக்கள் பெற்று வருகிறார்கள். நடமாடும் மகாபொலவின் மூலம் கிட்டிய நன்மைகளில் அதுவும் ஒன்று.

உலகில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் உள்ள வேலைகள் மற்றும் வர்த்தக சந்தைகள் சம்பந்தமாக கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் அந்த சமூக அமைப்புகளின் நடவடிக்கைகள் மற்றும் சிந்தனைகளை நாம் அறிகிறோம்: அத்துடன் அங்கு தோன்றியுள்ள விழிப்புணர்வையும் தெரிந்து கொள்கின்றோம். அதே சமயம் இந்த சமூக பொருளாதார அமைப்பில் யதார்த்தமான. உண்மைகள் ஒரு புறம் இருக்க சீரிய செயல் திட்டங்களும் நிறைவேறி வருகின்றன குறைந்த மூலதனத்துடன் கூடுதலான நிபுணத்துவத்தை பிரயோகித்து பலன் பெறும் வழிவகைகளை அச்சமூக அமைப்பு கண்டு பிடித்துள்ளது. போட்டா போட்டி அடிப்படையில் முறையான திட்டங்களுடன் விரிவாக நடத்தப்படும் வர்த்தக சந்தைக்கு முகாமைத்துவமும் கிட்கிறது. அதிலும் விழிப்புணர்வு கிட்டுகிறது. பொதுவாக நிறுவனங்கள் எதிர்பார்ப்பது இலாபத்தைத் தான். நடமாடும் மகாபொலவில் பங்கு பற்றுவதனைப் பார்க்கும்போது அதில் லாபம் கிட்டுவதால் இரண்டு வருடத்திற்குள் அதில் அவை இணைந்துள்ளமையையும் அவதானிக்க முடிகிறது.

மகாபொலவில் சுய தொழில் வாய்ப்புக்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. தற்போது தோன்றியுள்ள வர்த்தகத்துறை விழிப்புணர்வு பலரை இதில் பங்குகொள்ள வைக்கின்றது. அதாவது சிறிய பெட்டிகளில் சிகரட், வெற்றிலை போன்றவற்றை வைத்து விற்பனை செய்து வரும் சிறிய வியாபாரிகள் கூட தமது அன்றாட செலவு போக சுமார் 300 ரூபாயளவில் இலாபம் தேடுகின்றனர் அதாவது, மகாபொல நடைபெறும் ஒரு வார காலத்தில் அவர்கள் இவ்விதம் சம்பாதிக்கின்றனர். இதனால் திருப்தியான வாழ்வும் அவர்களுக்கு மகாபொலவின் மூலம் கிட்டுகின்றது. சிறந்த நிர்வாகத்துடன் இயங்கும் கூட்டுத்தாபனங்களும் இம்மகா பொலவினால் சிறந்த நன்மைகளை அடைவதை அறிய முடிகிறது.

மகாபொலவில் பாவனையாளர்களுக்கு குறைந்தபட்ச நன்மைகளும் கிட்டுவதுண்டு. வருவாய்க்கென உழைக்கும் பாவனையாளர்கள் மட்டுமல்ல பாடசாலை செல்லும் மாணவர்களும் அதிக பலன் பெற்று வருகிறார்கள். பாடசாலையில் பெறும் கல்வியுடன் பிரத்தியேகமான கல்வியையும் இதன் மூலம் அவர்கள் பெறவாய்ப்புண்டு.

பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் பற்றி இந்நாட்டு மக்கள் நன்கு தெரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருக்காதமையால் சில மோசடி வர்த்தகர்கள் மக்களை ஏமாற்றி வருகிறார்கள். ஆனால், மகாபொலவிற்கு வரும் மக்கள் பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் தொடர்பாக சிறந்த அறிவினையும் பெற்று வருகிறார்கள். அத்துடன் மகாபொல வெறுமனே வர்த்தக சந்தையாக இயங்காமல் மக்களை கவரும் விதத்தில் சுவரொட்டி, புகைப்படக் கண்காட்சி, கலாசார விழாக்கள் என்பன வற்றையும் நடத்தி வருகின்றது. அக் கண்காட்சிகள் கூட வர்த்தகம், நுகர்வு தொடர்பாக மக்களுக்கு நன்மையளிக்கும் விதத்தில் ஏற்படுத்தப்படுகின்றது. மாணவர் முதல் வயது வந்த பெரியவர்கள் வரையில் இவற்றைக் கண்டுகளித்து புத்துணர்வும், புது அனுபவமும் பெறுகிறார்கள்.

துறைமுக அதிகார சபையும் இக் கண்காட்சியில் பங்கு பற்றி துறைமுகம் தொடர்பான அறிவினை மக்களுக்கு வழங்கி வருகின்றது. தேசிய அடிப்படையில் துறைமுகங்கள் புரிந்து வரும் நன்மைகள் குறித்து நல்ல விளக்கம் பொது மக்களுக்குக் கிட்டுகின்றது.

வர்த்தகக் கப்பற்துறை அமைச்சினால் இந்த நடமாடும் மகாபொலவில் காண்பிக்கப்படும் கண்காட்சி இலங்கையின் வர்த்தகத்துறை முன்னேற்றத்தையும், எதிர்கால திட்டங்களையும் வெளிப்படுத்தி வருகின்றன. இப்பொழுது மேற்படி அமைச்சின் கீழ் உள்ள 25 க்கும் மேற்பட்ட கூட்டுத்தாபனங்கள் மற்றும் திணைக்களங்களின் வளர்ச்சியையும் நாம் அறிய முடிகிறது. தேசிய உற்பத்திகள் மற்றும் ஏற்றுமதி வர்த்தகம் என்பன பற்றிய தெளிவான அறிவையும் மக்கள் பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது.

அத்துடன் தொலைக் காட்சி போன்ற பொதுசனத் தொடர்பு சாதனங்கள் மூலமாக வர்த்தகத் துறையில் நிகழும் அபரிதமான வளர்ச்சியையும் மக்கள் கண்டு, புரிந்து கொள்ள முடிகிறது.

மகாபொல நடைபெறும் பாடசாலைகள் கூட இதன் மூலம் பலன் பெற்று வருவதை அறியலாம். இதற்கு வரும் பொது மக்களிமிருந்து அறவிடப்படும் பணம் அந்தந்த பாடசாலைகளின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்தப்படுகின்றது.

மகாபொல திட்டமானது மக்களைப் பொறுத்தவரையில் சிறந்த வெற்றி என்றே கூற வேண்டும். நாட்டின் முன்னேற்றத்தையும், மக்களின் சிந்தனை வளர்ச்சியையும் இனங் காட்டும் கண்ணாடியாகவும் மகாபொல திகழ்வது குறிப்பிடத்தகுந்தது.



**மகாபொல புலமைப் பரிசில் பெற்ற மாணவர்களின் உறவினர்கள் மத்தியில் அமைச்சர் லலித்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமத்தொழில் சமுதாயத்தின் ஜீவநாடி. கமத்தொழில் வளர்ச்சி பெறும் போதே மனித குலமும் உயர்ச்சி அடைகிறது. கமத்துறை அறிவை பெருக்கும் நோக்குடன் கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் ''கமநலம்'' என்ற பெயரில் ஒரு சஞ்சிகையை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெளியீட்டு வருகிறது. இதில் கமப்பெரு மக்களுக்குச் சிறப்பாகவும், மாணவர்களுக்கும், மாதருக்கும், மற்றோருக்கும் பொதுவாகவும் பயன்படக்கூடிய கட்டுரைகளும், பிற அம்சங்களும் வெளியிடப்படுகின்றன.

கமத்துறையில் கூட இப்போது எத்தனை வரவேற்கத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. புதுப்புது உத்திகள் பல புகுத்தப்படுகின்றன. இவை காரணமாக இன்று கமப் பெருமக்கள், கமத்தொழில், கமநலன், கிராமம், கிராமிய நிறுவனங்கள், காணிப்பங்கீடு, உதவிப் பணத்திட்டம், கமக்காப்புறுதி, உயர் விளைச்சல் தரும் விதை இனங்கள், உரம், மண், நீர், விளைபொருள், விலைகள், சந்தைப்படுத்தல், கூட்டுறவு இயக்கம் போன்ற பல விடயங்களை நல்லாகத் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகிறது. இவ்விடயத்தில் தொடர்பான புதுப்புது அம்சங்களையும், தகவல்களையும் ''கமநலம்'' வெளியிட்டுக்கொண்டே இருக்கும்.

''கமநலம்'' மூன்று (3) மாதங்களுக்கு ஒரு முறை அதாவது, மார்ச், ஜூன், செப்டம்பர், டிசம்பர் மாதங்களில் வெளிவரும். தனிப்பிரதியின் விலை **3.00** ரூபா மட்டுமே. வருடச்சந்தா **10.00** ரூபா. அதாவது, ஒரு இதழுக்கு **2** ரூபா **50**சதமே முடிகின்றது. முத்திரைச் செலவையும் நாங்களே ஏற்கிறோம்.

''கமநலம்'' சஞ்சிகைக்கு நீங்களும் சந்தா செலுத்திப்பெற நிச்சயம் விரும்புவீர்கள். ஆகையினால், சந்தா படிவத்தை இத்துடன் இணைத்துள்ளோம். இப் படிவத்தைத் தயவு கூர்ந்து நிரப்பி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புங்கள்.

**பணிப்பாளர்,**
**கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்,**
**த. பெ. இல: 1522,**
**114, விஜேராம மாவத்தை,**
**கொழும்பு-7.**

சந்தாப் படிவம்

நான் கமநலம் சஞ்சிகையின் ஓராண்டுச் சந்தாதாரராகச் சேர விரும்புகிறேன். இத்துடன் 10 ரூபாவுக்கு காசுக்கட்டளை/அஞ்சற் கட்டளை அனுப்புகிறேன்.

பெயர்: ...........................................

விலாசம்: ...........................................

...........................................

குறிப்பு: காசுக் கட்டளையில் அல்லது அஞ்சற் கட்டளையில் பணம் பெறுபவரின் பெயர் என்ற இடத்தில் கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் எனக் குறிப்பிடவும்.

Agrarian Research and Training Institute.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவனையாளர்களுக்கு கைகொடுத்தல்


பாவனையாளர்களுக்கு வர்த்தகர்களும், வர்த்தகர்களுக்கு பாவனையாளர்களும் வேண்டியவர்கள். பாவனையாளர் தமக்குத் தேவையான பொருட்களை வர்த்தக நிலையங்களில் கொள்வனவு செய்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான பொருட்களை வழங்கியே லாபம் பெறுகின்றார்கள். இது தொன்று தொட்டு இடம்பெற்று வரும் ஒரு செயற்பாடாகும்.

தனிப்பட்ட வர்த்தகர்களின் எண்ணிக்கை இன்று ஆறு இலட்சத்திலும் அதிகமாகும். இதில் பாதிக்கு மேற்பட்ட வர்த்தகங்கள் தோன்றியது 1977ஆம் ஆண்டிற்குப் பிறகாகும். இது தவிர கூட்டுறவு வர்த்தகர்களும் இரண்டாயிரம் பேர் அளவில் உள்ளார்கள்.

தனக்குத் தேவையான பொருட்களைக் கிடைக்கும் இடங்களில் கொள்வனவு செய்வது பாவனையாளர்களின் பழக்கமாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் வர்த்தகர்கள் ஏமாற்றுதல், நயவஞ்சகம் புரிதல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் பாவனையாளர்களுக்கு சில இன்னல்கள் ஏற்படுவது நாமறிந்ததே. பாவனையாளருக்கு இன்னல்கள் ஏற்பட்டாலும் தமது சொந்த இலாபத்தை பெருக்கிக் கொள்வதற்கே வர்த்தகர்கள் முயற்சி செய்கிறார்கள்.

இந்த நிலைமையை மாற்றுவதற்கு அரசு எடுக்கும் முயற்சிகளை இங்கு விளக்க வேண்டும். வர்த்தகர்கள் கொள்ளை லாபம் அடிப்பதை நிறுத்துவதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கையே பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் ஆகும். இச்சட்டம் சம்பந்தமான அறிவைப் பெற்றுக் கொள்வது பாவனையாளரின் கடமை. பாவனையாளர்கள் தமது உரிமைகளையும், சலுகைகளையும் அறிந்ததன் பின்னர் வர்த்தகர்களுடன் தொடர்பு கொள்வதே முறையாகும்.

தற்போதைய வர்த்தக முறை திறந்த பொருளாதாரத்தை அடிப்படையாக கொண்டு அதிகமான சுதந்திரத்தைப் பெற்றுள்ளது. முன்னிருந்த கட்டுப்பாடுகள் காரணமாக வர்த்தகர்களுக்கு தமக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வதில் சந்தர்ப்பங்கள் கிட்டவில்லை. அரச துறையோ, அல்லது தனியார் வர்த்தகர்களோ விற்பனை செய்யும் உள்ளூர் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களைத் தவிர தமக்குத் தேவையான பொருட்களை பெறுவதில் வர்த்தகர்கள் கஷ்டத்தை




சிங்களத்தில் :

**ஒகஸ்தூஸ் விநாயகரட்னம்**

தமிழில் :

**என். எல். எம். முஸாபீர்**

(ஆய்வாளர்)

கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்நோக்கினர் என்பது யாவரும் அறிந்ததே. அரசாங்க சட்ட விதிகளுக்கு கட்டாயம் அடிபணிய வேண்டிய நிலை ஏற்பட்டது. தற்போது அந்த நிலை இல்லை. பாவனையாளர்கள் விரும்பும் பல்வேறு வகைப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்து மிகச் சுலபமாக வர்த்தக நிலையங்களில் கிடைக்கச் செய்வதற்கு அவர்கள் பழக்கப்பட்டு விட்டார்கள்.

இவ்வாறான போட்டி வர்த்தகம் ஏற்படும் போது பாவனையாளர்களைப் பாதுகாப்பது அரசின் கட்டாய கடமையாகும்.

## அநியாயத்தைக் குறைக்கும் புதிய சட்டங்கள்

இந்நாட்டில் வர்த்தகத்தில் 30 சதவீதம் கூட்டுறவு இயக்கம் மூலம் நடத்தப்படும் அதேவேளை 10 சதவீதம் அரச துறைகள் மூலமும், மீதி 60 சதவீதம் தனியார் வர்த்தகர்கள் மூலமும் நடைபெறுகின்றது.

அத்தியாவசிய பொருட்கள் நாடு முழுவதிலுமுள்ள ஏழாயிரம் கூட்டுறவுச் சங்கக் கடைகள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், சந்தைப்படுத்தும் திணைக்களம் ஆகியவற்றின் வர்த்தக நிலையங்கள் மூலமாகவும் பாவனையாளருக்குத் தேவையான பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன. இருப்பினும் பெரும்பான்மையான திரவியங்களையும், பொருட்களையும் மக்கள் பெற்றுக் கொள்வது நாட்டிலுள்ள 15,000 தனியார் சில்லறை வர்த்தக நிலையங்கள் மூலமேயாகும். தனியார் கூட்டுறவு நிலையங்களில் கட்டுப்பாட்டு விலையை அனுசரித்து விற்றல், நிறையைச் சரியான முறையில் நிறுத்தல் போன்றவற்றையும் பார்த்துக் கொள்வதே பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின் பிரதான குறிக்கோளாகும்.

உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம் உருவாக்கப்பட்டிருப்பது விலைக்கட்டுப்பாடு சம்பந்தமாகவும், பாவனையாளர்களைப் பாதுகாப்பது சம்பந்தமேயாகும். பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தில் சட்ட விதிகளைப் பெருமளவில் நிறைவேற்றுவது இத் திணைக்களத்தின் கடமையாகும். பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின் விசேட விதிகளை அதிகளவில் உள்ளூர் வர்த்தகத் திணைக்களத்தின் ஆணையாளராலும், அவரது உத்தியோகத்தர்களினாலுமே நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்தச் சட்டத்தின் புதிதாக திருத்தி அமைக்கப்பட்ட விதி வர்த்தக சம்பந்தமான அமைச்சினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்டன. இதனால் வர்த்தகர்கள் சட்டத்தை மீற முடியாதொரு சந்தர்ப்பமும், சூழ் நிலையும் உருவானது.

இத்திருத்தச் சட்டத்தின் மூலம் முதலாவதாக சகல தனியார் வர்த்தகர்களும் சந்தைக்கு விற்கும் பொருட்கள் எங்கிருந்து பெறப்பட்டது, வர்த்தகப் பெயர், விலாசம் ஆகியவை அடங்கிய பற்றுச் சீட்டொன்றை தன்வசம் வைத்திருக்க வேண்டும்.

இரண்டாவதாக, விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் எல்லாப் பொருட்களினதும் விலைப்பட்டியலை பாவனையாளரின் பார்வைக்கு வைத்திருக்க வேண்டும்.

மூன்றாவதாக யாராவதொரு பாவனையாளர் தான் கொள்வனவு செய்த பொருளுக்கு பற்றுச்சீட்டொன்றை கேட்குமிடத்து அதை வர்த்தகர் வழங்குவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

இவ்வாறான சட்டங்கள் மூலம் வெளிநாடுகளில் இருந்து அளவாக கொண்டு வரப்படும் பொருட்களையும் அரச நிறுவனங்களில் திருட்டுத்தனமாகப் பெறப்பட்ட பொருட்களையும் கண்டுகொள்ள முடியும். இரண்டாவது, மூன்றாவது விதிகளின்படி கட்டுப்பாட்டு விலைக்கே பொருட்கள் விற்கப்படுவதையும், அதற்காக கொடுக்கப்படும் விலை நியாயமானதென்பதையும பாவனையாளர் அறிந்து கொள்ளலாம்.

தற்போது உள்நாட்டு வர்த்தக திணைக்களத்தின் மூலம் நாடு பூராவும் பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இது வரை 2014 குழுக்கள் உருவாக்கப்பட்டு விட்டன. 22 மாவட்டங்களில் நகர மட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள இக்குழு முறை கிராம மட்டம் வரை விரிவு படுத்தப்பட்டு வருகின்றது. இவற்றை மேற்பார்வை செய்வதற்காக 22 மாவட்ட இணைப்புக் குழுக்களும் உருவாக்கப்பட்டு செயற்படும் நிலையிலுள்ளன.

அரச நிறுவனங்களில் இவ்விதிகள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதை அவதானிப்பதே இக்குழுக்களின் பிரதான குறிக்கோளாகும். குறைபாடுகள், சீர்கேடுகள் ஏற்படுமிடத்து அவற்றை சீர் செய்தலும் இக்குழுக்களையே சாரும். நிறை குறைத்து விற்றல், கூடிய விலைக்கு விற்றல், தரங்குறைந்த பொருட்களை விற்றல் ஆகியன சட்ட பூர்வமாக தடை செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான காரியங்களில் ஈடுபடும் வர்த்தகர்களை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துதல் பாவனையாளர் குழுக்களின் விசேட சேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குழுக்களின் பொறுப்புக்களினுள்ளே பாவனையாளர் பிரச்சினைகளை பிரதி நிதித்துவம் செய்தல், பாவனையாளர்களுக்குப் பிரயோசனமுள்ள உண்மைத் தகவல்களை கொடுத்தல், பாவனையாளரின் அறிவை விருத்தி செய்தல், பாவனையாளர் பிரச்சினைகளை தீர்த்து வைத்தல், பாவனையாளரும் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் அரசாங்கத் திணைக்களம், நிறுவகங்கள் உடன் இணைப்புச் செய்தல், சந்தர்ப்பவாத வர்த்தகங்களில் அவதானமாக இருத்தல், சந்தர்ப்பவாதம், சீர்கேடுகளிலிருந்து தவிர்த்தல், பொருட்களை விநியோகிக்கும் போது அவற்றின் தரமும் விலையும் சரியானதா என்பதை அவதானித்தல் ஆகியன அடங்கும்.

## திருட்டுப் பொருட்களின் நிறுத்தம்


**பாவனையாளர் குழுவொன்றை அமைப்பது எப்படி?**

கிராம சேவகர் பிரிவொன்றுக்கு அல்லது நகரின் தேர்தல் தொகுதி ஒன்றுக்கு 15 பேருக்கு மேற்பட்டோருக்கு ஒரு குழுவொன்றை அமைத்துக் கொள்ள முடியும். அண்மையிலுள்ள உதவி அரசாங்க அதிபர் காரியாலயமொன்றுக்கு சென்று அங்கிருக்கும் உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளரிடம் தமது அமைப்பைப் பற்றிக் கூற வேண்டும். எல்லா உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களிலும் உங்களுக்கு உதவி செய்வதற்காக வேண்டி இணைப்பு அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். உங்களுக்குத் தேவையான விபரங்களை அவர் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**பாவனையாளரின் பாதுகாப்புக்காக நீதிச் சட்டத்துறையில் நடவடிக்கைகள் இருக்கின்றதா?**

ஆம், 1979 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க பாதுகாப்புச் சட்டமும் இது சம்பந்தமானதே. இதைவிட விலைக்கட்டுப்பாட்டு சட்ட விதிகள் அளவை, நிறுவைகள் சட்ட மூலமும் இருக்கின்றது. பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின் 5 (1) விதியின் படியும் பாவனையாளர் குழுக்கள் ஆரம்பிப்பதை ஏற்றுக் கொண்டுள்ளது. இது போன்று உள்ளூர் வர்த்தகம் சம்பந்தமான ஆணையாளருக்கும் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

வர்த்தகர்களும், பாவனையாளர்களும் அடங்கிய குழுவினருடன் கலந்துரையாடி விநியோகம் செய்யும் முறையை தீர்மானித்தல், விலையைக் குறித்தல், 'லேபல்கள்' ஒட்டுதல், ஒழுங்கு விதிகளை அறிவித்தல், பொருள் விற்பனை விதிகளைத் தெரிவித்தல், உற்பத்தியாளர் வர்த்தகர்களிடையே விலை சம்பந்தமான ஒருமைப்பாட்டை ஏற்படுத்தல், இதற்கும்மேலாக இந்தச் சட்டத்தில் பாவனையாளரை ஏமாற்றுதல், வஞ்சகம் செய்தல், விற்பனை செய்த பொருளுக்கு பற்றுச் சீட்டொன்றை வழங்காமல் விடுதல் போன்றவற்றிலிருந்து பாதுகாப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.



ஒரு வர்த்தக கண்காட்சி

**சட்ட விதிகள் இருக்கும் போது பாவனையாளர் பாதுகாப்புக்குழு அவசியமா?**

சட்டமும், தண்டனையும் மாத்திரம் போதுமானதல்ல. எல்லோருமே பாவனையாளர்கள். எல்லாப் பாவனையாளர்களும் நன்கு அறிந்தவர்களாக இருந்தால் நீதித்துறையில் செய்ய முடியாத எத்தனையோ காரியங்களைச் சாதித்து விடலாம். அதிக விலை, தரங்குறைந்த பொருட்கள், பொருட்களை பதுக்குதல் போன்ற வர்த்தகர்களின் தவறுகளை எடுத்துக் காட்டலாம்.

இன்னும் இதன் விசேடம் என்னவென்றால் எல்லா பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்களும் நலன்புரிச் சங்கங்களாக இயங்க முடியும். இவ்வாறான குழுக்கள் மூலமாக ஒவ்வொரு நிறுவனங்கள் மூலமாகவும் அத்தியாவசியப் பொருட்களை பெற்று விநியோகஞ் செய்யலாம்.

பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் மூலமாகவும், பாவனையாளருக்கு பல்வேறுபட்ட பிரயோசனங்களை பெறுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இன்னும் பாதுகாப்புக் குழுக்களை ஆரம்பிக்காத நகர், கிராமங்களில் இவற்றை ஆரம்பிப்பது எமது முக்கிய உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கு வழிவகுக்கும் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலமான திறந்த வர்த்தகக் கொள்கையே பாவனையாளர் நலன் பேணுவதற்கு ஒரே சான்று !

- o கூட்டுறவு மொத்த வர்த்தகக் கூட்டுத்தாபனம்
- o இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
- o தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
- o இலங்கை இறக்குமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
- o இலங்கை அரச வர்த்தக (புடவை) கூட்டுத்தாபனம்
- o இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம்
- o இலங்கை அரச வர்த்தக (டிரக்டர்) கூட்டுத்தாபனம்
- o இலங்கை அரச வர்த்தக (ஒருங்கிணைக்கப்பட்ட ஏற்றுமதி) கூட்டுத்தாபனம்
- o இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
- o இலங்கை கப்பற் சரக்கு மத்திய நிலையம்
- o மட்டுப்படுத்தப்பட்ட கொழும்பு டொக்யாட்
- o மட்டுப்படுத்தப்பட்ட கொழும்பு கொமர்சல் (தேயிலை) நிறுவனம்
- o மட்டுப்படுத்தப்பட்ட எசன்சல்ஸ் ஒய்ல்ஸ்
- o மட்டுப்படுத்தப்பட்ட எக்லண்ட் பினுன்ஸ் அன்ட் இன்வெஸ்மன்ட்ஸ்
- o மட்டுப்படுத்தப்பட்ட சிலோன் மெனுபக்ஸர்ஸ் அன்ட் மெர்சன்ஸ்
- o வர்த்தகத் திணைக்களம்
- o உள்நாட்டு வர்த்தக அலுவல்கள் திணைக்களம்
- o தேசிய விலை ஆணைக்குழு
- o தேசிய மெட்ரிக் மாற்றீட்டு அதிகார சபை
- o சிலோன் சிப்பிங் லைன்ஸ்
- o சந்தைப்படுத்தல் அபிவிருத்தித் திணைக்களம்
- o ஏற்றுமதி இறக்குமதி பரிபாலனத் திணைக்களம்
- o வர்த்தக கப்பல் அலுவல்கள் திணைக்களம்
- o நிறுவனங்கள் பதிவுத் திணைக்களம்
- o வர்த்தகப் பொருட்கள் கொள்வனவுத் திணைக்களம்
- o அரச வழங்கல் திணைக்களம்
- o மட்டுப்படுத்தப்பட்ட துறைமுக சேவைகள்
- o இலங்கை இறக்குமதி அபிவிருத்திச் சபை

**பாவனையாளரின் விருப்பமே எமது விருப்பம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........

# கறுவா உற்பத்தியும் ஏற்றுமதியும் உயர சில வழிகள்

கறுவா பயிரானது இலங்கையில் வர்த்தக ரீதியில் வளர்க்கப்படுகிறது. இது சந்தைக்கான கறுவா, உயர்ரக கறுவா எண்ணெய், கறுவா இலை எண்ணெய் ஆகியவற்றை உற்பத்தி செய்கிறது. பதனிடப்பட்ட கறுவாப்பட்டை நான்கு வடிவங்களை பெறுகின்றது.

போர்த்துகேச, டச்சு மற்றும் ஆரம்ப பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சிக்காலங்களின் போது அரசாங்கத்தின் முக்கிய வருமானமாக கறுவா திகழ்ந்தது. இலங்கையில் முறையான கறுவா பயிர்ச் செய்கை 1767இல் ஆரம்பமானது. கடிரன, எக்கல, நீர்கொழும்பு, கொழும்பு போன்ற பகுதிகளில் வெண்மணலில் இது பயிரிடப்பட்டது. பின்னர் இதன் பயிர்ச்செய்கை காலி, மாத்தறை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு பரவியது. கறுவா பயிர் செய்யப்படும் நிலப்பரப்பில் 72 சதவீத நிலப்பரப்பு காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் 26 சதவீத நிலப்பரப்பு இரத்தினபுரி, கொழும்பு, கம்பஹா, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலும் அடங்கும். இலங்கையில் ஹெக்டர் ஒன்றுக்கு 1/2 மெட்ரிக் தொன் தயார் நிலையில் உள்ள கறுவா கிடைத்தால் அது ஓரளவு நல்ல விளைச்சல் என்றே சொல்ல வேண்டும்.

கறுவாவில் ஐந்து வெவ்வேறு பட்ட வர்க்கங்கள் உள்ளன. இடமும், சூழ்நிலையும் கறுவாவின் குணதிசயங்களில் அதிகளவு ஆதிக்கம் செலுத்துகின்றன. இந்த வர்க்கங்கள் பட்டையின் குணதிசயங்கள், காரம் ஆகியவற்றுடன் அடையாளம் காணப்படுகின்றன. கறுவா சுருள்களில் பத்து தரங்கள் உள்ளன. முதலாவது தரமான சி. 5 விசேடம் ஜா–எலே, எக்கல ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. கடைசி தரமாக விளங்கும் 'எச்' அம்பலாங்கொடையிலும், தென் மாகாண மாவட்டங்களிலும் விளைவிக்கப்படுகின்றன.

கறுவா பரவலாக 'பேக்கிங்'குக்கு பாவிக்கப்படுகின்றது. கேக், பாண், பணிஸ், பிஸ்கட் போன்ற உணவுப் பதார்த்தங்களிலும் பாவிக்கப்படுகின்றது. கறுவா தடி குளிர்பானகைத்தொழிலுக்குமுக்கியமானது. சூடான வைன், ஒரு வித கூழ் போன்றவற்றுக்கு மணமூட்ட வடமேற்கு ஸ்கண்டிநேவியன் நாடுகளில் பரவலாக உபயோகிக்கப்படுகின்றது. அதே வேளையில், மெக்சிக்கோவில் ஒரு வகையான வடிசாறு தயாரிக்க பாவிக்கப்படுகின்றது.

இலங்கையில் கேக், 'புடிங்', பாயசம் போன்றவற்றுக்கு மணமூட்டவே கறுவா பாவனையில் உள்ளது. கறுவா தடிகள் அறுவடை செய்யப்பட்ட பின் எஞ்சியுள்ள இலைகளில் இருந்து கறுவா எண்ணெய் வடிக்கப்படுகின்றது. எண்ணெயும், வேரும் மருத்துவத்திற்கு உபயோகிக்கப்படுகின்றன.

உலக சந்தையில் 'கஸியா' எனஅழைக்கப்படும் ஒரு வித கறுவா இன தாவரத்துடன் கறுவா போட்டியிட வேண்டிய நிலை இன்று நிலவுகிறது. 'கஸியா' இந்தோனேஷியா, வியட்நாம் மற்றும் ஆசிய பிராந்தியத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட தொகை நாடுகள் ஆகியவற்றில் உற்பத்தி செய்யப்படுகின்றது. அடிப்படையில் இரு இனங்களும் ஒன்றுடன் ஒன்று மாற்றீடு செய்யக்கூடியன. அத்துடன் பொதுபாவனைகளுக்கு உட்பட்டன. ஆனால், தூளான நிலையில் இவை ஒரே விதமானவை அல்ல. 'கஸியா' செம்மண் நிறமும், கறுவா கரும் மண் நிறமும் கொண்டன.

சர்வதேச சந்தைக்கு கறுவா', கஸியா' ஆகியவைஒன்றுகவிற்பனைக்குச்செல்வது தொகை ரீதியில் குறைந்து கொண்டே வருகிறது. உலக சந்தையில் விநியோகங்கள் குறைவதனால் 'கஸியா' உலகச்சந்தையில் பெரும்பங்கினை படிப்படியாக பெற்று விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........

இதனை அமெரிக்காவில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அமெரிக்காவிலேயே கறுவா, 'கஸியா' ஆகியன அதிகளவு சந்தைப்படுத்தப்படுகின்றது. 1970இன் ஆரம்பத்தில் அமெரிக்காவின் 'கஸியா', கறுவா இறக்குமதியின் விகிதாசாரம் 2:1 ஆகும்.

1980இல் இந்த விகிதாசாரம் 9:1ஆகும். சகல ஐரோப்பிய இறக்குமதி நாடுகளும் கறுவாவையும், 'கஸியாவையும்' உபயோகிக்கின்றன. இதே போல கிழக்கு ஐரோப்பிய சந்தையிலும், ஜப்பானிலும் 'கஸியா' விற்கே முன்னுரிமை உள்ளது. மெக்ஸிக்கோவே உலகத்தில் உள்ள நாடுகளில் இலங்கையிலிருந்து அதிகளவு கறுவாவை கொள்வனவு செய்கிறது.

கறுவாவின் உலக விநியோகத்தில் இலங்கை பெரும் பங்கினை வகிக்கிறது. இலங்கை ஒரு பாரிய உற்பத்தி, ஏற்றுமதி நாடாகும். இதனை தொடர்ந்து சீ-ஸெல்ஸ், மடகஸ்கார், இந்தியா ஆகிய நாடுகள் இடம் வகிக்கின்றன.

கடந்த ஜுன் வரை இலங்கை 8 கோடியே 24 லட்சம் பெறுமதியான 2900 மெட்ரிக் தொன் கறுவாப்பட்டைகளையும், சுள்ளிகளையும் ஏற்றுமதி செய்துள்ளது. இக் கால கட்டத்தில் 3 கோடியே 40 இலட்சம் ரூபா பெறுமதியான கறுவாப்பட்டை (43 சதவீதம்) அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்றவையே எமது நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட கறுவா சுள்ளிகளை அதிகளவு வாங்கிய ஏனைய நாடுகளாகும். மொத்த கறுவா சுள்ளி இறக்குமதியில் இந்நாடுகளின் பங்கு 77 சத வீதமாகும்.

கறுவா சிறு பயிராக இருப்பதனால் பெரும்பாலும் இது கரையோர நிலப் பகுதிகளில் செய்கை பண்ணப்படுகிறது. எனவே, சிறந்த பயிர்ச்செய்கையைக் கடைப்பிடிப்பதன் மூலம் நீண்ட காலத்திற்கு கூடிய விளைச்சலைப் பெறலாம். அண்மையில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வின் பிரகாரம் 70 சதவீத கறுவா உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளை கிராமத்தில் உள்ள வர்த்தகர்களுக்கும், எஞ்சிய 30 சதவீதத்தினர் தமது உற்பத்திகளை கூடிய விலை பெறுவதற்காக கிராமங்களை அண்டியுள்ள நகரங்களில் உள்ள வர்த்தகர்களுக்கும் விற்பனை செய்கிறார்களாம். சந்தையில் கறுவாவின் நிலவரம், தரம் ஆகியன சம்பந்தமான அறிவு இவர்களுக்கு மிகவும் குறைவாகும். உள்ளூர், ஏற்றுமதி சந்தை நிலவரம், தரங்கள், விலைகள் ஆகியவற்றில் அவர்களது அறிவை விருத்தி செய்வதற்கு அவர்களின் உற்பத்திகளை ஒரு தொகையாக விற்பனை செய்வதே ஒரு வழியாகும். இதற்கு திறமையான உற்பத்தியாளர் தாபனங்கள் அவசியமாகும்.

கறுவா செய்கையின் கீழான நிலம் ஓரளவு குறைந்துள்ளது. 1981ஆம் ஆண்டுடன் 1980 ஆண்டை ஒப்பிடும் போது ஏற்றுமதி 9131 மெட்ரிக் தொன்னில் (448,698,594 ரூபா பெறுமதி) இருந்து 5029 மெட்ரிக் தொன்னுக (205, 237, 233 ரூபா பெறுமதியான) குறைந்துள்ளது. மொத்த சிறு ஏற்றுமதி பயிர் ஏற்றுமதி வருவாயில் வழமையாக கறுவாவின் பங்கு சுமார் 40சதவீதமாகும். மீண்டும் ஒரு முறை ஏற்றுமதிகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

இலங்கையின் கறுவா ஏற்றுமதி வலிமையான இடத்தைப் பிடிக்க வேண்டுமென்றால் உயர்ந்த தரத்திற்கு அதன் உற்பத்தியைக் கொண்டு வர வேண்டும். இப்படி செய்யும் போது 'கஸியா' போன்ற ஏனைய மாற்றீடுகளின் போட்டியை நினைவில் வைத்திருக்க வேண்டும். அத்துடன் உலகத்தின் பாவனை சம்பந்தமாகவும், முக்கிய நாடுகளின் பாவனைக்கான தேவைக்கு மிஞ்சிய கையிருப்புகள் சம்பந்தமாகவும், அதிகளவு தெரிந்து வைத்திருக்க வேண்டும். கறுவா ஏற்றுமதி குறித்து மேலும் அவசியமான ஆராய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

(மூலம்: சமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் உணவு பண்டக செய்தி இதழ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Agrarian Research and Training Institute

# FOOD COMMODITIES BULLETIN

*The Institute issues a weekly Food Commodities Bulletin every Friday containing price and supply information (Wholesale and Retail) of food commodities in the Colombo city and suburbs. Similar information from 12 other cities will be included in the Bulletin shortly.*

*Subscription rates are as follows :*

| | | |
|---|---|---|
| One year | Rs. 250/- | (52 issues) |
| Six months | Rs. 125/- | (26 issues) |
| Three months | Rs. 65/- | (13 issues) |
| Single Copy | Rs. 5/- | |

*Those who wish to obtain copies send the subscriptions to .—*

*The Director,*
*Agrarian Research & Training Institute,*
*P. O. Box 1522,*
*Colombo.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ கமநலம் ★

- கமக்காரர்களுக்கும், கமக் குடும்பத்தினருக்கும், கமத்துறையில் அக்கறை கொண்டுள்ள அத்தனை பேருக்கும் பயன்படக்கூடிய பல தரமான கட்டுரைகளைத் தாங்கி காலாண்டு சஞ்சிகையாக மலர்கிறது "கமநலம்."

- கமக்காரர்களது வீடுகளில் மாத்திரமின்றி பாடசாலைகள், நூல்நிலையங்கள் ஆகியவற்றிலும் "கமநலம்" பிரபலம் பெற்று வருகிறது.

- கமத்துறையின் சமூக-பொருளாதார பிரச்சினைகளும், தீர்வுகளும் இச்சஞ்சிகையில் ஆராயப்படுவதுடன், கமத்துறை சார்ந்த அறிவியற் கட்டுரைகளும் வெளியிடப்படுகின்றன.

அச்சுப்பதிவு: குமரன் அச்சகம், 201, டாம் வீதி, கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org